# கிராமநலம்

ஜூலை-'68

- கழுகுமலை
- தமிழகத்தின்
- சிறந்த கிராமம்

சிறப்புக்கட்டுரை உள்ளே



முதல் பரிசு பெற்ற ஊர்ப்பணியாளர் பேட்டி (அடுத்த இதழில்)



# இதோ,
# மகிழ்ச்சி நிறைந்த
# சீதா...

அவள் மகிழ்ச்சிக்குக் காரணம்·

அறிவுள்ள கணவன்



இனிய குழந்தைகள்· தனக்கே உரிய ஒரு வீடு வளமிக்க வயல்



## பிஎஸ்ஜி பம்பு
## அளிக்கும் நிறைந்த விளைச்சல்.



PSG *the hallmark of high standard*

- நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள்.
- என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது.
- தாராளமாக தண்ணீர் பெறுங்கள்.
- ஏராளமாக விளைச்சல் காணுங்கள்
- நிறைய செல்வம் அடையுங்கள்.

*விவரங்களுக்கு எழுதுங்கள்:*

**பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்**

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

*விற்பனைக் கிளைகள்:*

311, தம்பு செட்டித் தெரு, சென்னை 1

217, 218, மேலமாசி வீதி, மதுரை 1

Nalin-PSG-240 TL

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 ஜூலை 1968 நெல் 10


செய்திப் பேழை :

## காஞ்சித் தலைநகர் விழா!

பல்லவ பேரரசின் தலை நகராக விளங்கி வரலாற்றில் கீர்த்தி மிக்க புகழேடுகளை தனது சொந்தமாக்கிக் கொண்ட காஞ்சிமாநகர், மீண்டும் தலைநகராக மகுடம் சூட்டிக்கொண்டது.

இதுநாள் வரை சென்னையிலிருந்தே செயல்பட்டு வந்த செங்கற்பட்டுமாவட்ட தலைமை அலுவலகங்கள் ஜூலை முதல் நாளிலிருந்து காஞ்சிக்கு மாற்றப்பட்டன. இதை ஒட்டி காஞ்சித் தலைநகர் விழா, ஜூலைத் திங்கள் ஆறும் நாள் காஞ்சியில் நடைபெற்றது. விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் தலைமை வகித்தார்.

### பங்கு கொண்டோர்

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமிகாந்தன் பாரதி அனைவரையும் வரவேற்றார்.

தலைமையகத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவமைச்சர் திரு.கே. ஏ. மதியழகன் உரையாற்றினார்.

அரசு ஊழியர் குடியிருப்பு மனைக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அடிக்கல் நாட்டினார்.

புதிய தலைமையகக் கட்டிடங்களுக்கும், காவல் துறை கட்டிடங்களுக்கும் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அடிக்கல் நாட்டினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஏ. கோவிந்தசாமி, திருமதி சத்தியவாணிமுத்து, திரு மா. முத்துசாமி, திரு சாதிக்பாட்சா ஆகியோரும் கலந்து கொண்டனர். விழாவில் முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"ஆடவரும் பெண்டிரும் வாலிபர்களும் வயோதிகர்களும் செங்கற்பட்டு மாவட்டத் தலைநகராக காஞ்சிபுரம் ஆக்கப்படுகிற இந்த விழாவில் பங்கு கொண்டிருப்பது — இந்த முடிவு, எந்த அளவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

### நெடு நாள் விருப்பம்

ஒரு சர்க்கார் அலுவலகம் எங்கிருந்தால் என்ன, எங்கே மாற்றப்பட்டால் என்ன என்றில்லாமல் நாட்டு மக்கள் அக்கறை காட்டுவது — நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுகிறது என்பதற்கு அரிய எடுத்துக்காட்டு.

சொந்தக் கட்டிடத்தில் தலைமையகம் இன்று இல்லாமலிருந்தாலும், முறையே பொதுப் பணி அமைச்சரும், வருவாய்த் துறை அமைச்சரும், கூட்டுறவுத் துறை அமைச்சரும் கட்டிட கால்கோள் விழாக்களை நடத்தி சொந்தக் கட்டிடம் எழும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள்.

அலுவலகங்களாக மாளிகை எழில் மிக்க கட்டிடங்களும் அலுவலர் குடியிருப்புகளும் எழ இருக்கின்றன.

காஞ்சி தலைநகர் ஆவதற்கு எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் அமைச்சர்கள் கருணாநிதியும் மதியழகனும் எடுத்துக் கூறினார்கள்.

"இப்படி காஞ்சிபுரம் தலைநகர் ஆக்கப்படுவதை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்களும் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

முன்னாலிருந்தவர்கள் செய்ய நினைத்த நல்ல காரியங்களை நிறைவேற்றுவது எனது கடமை.

முன்பிருந்தவர்கள் தேவையில்லை என்று விட்டு விட்டாலும் அது நன்மை தரத்தக்கதாயிருந்தால் அப்படிப்பட்ட நல்லவை நடைபெற வொட்டாமல் குந்தகம் செய்ய மாட்டேன் என்பதனை எடுத்துக் காட்ட இந்த தலைநகர் மாற்றம் செய்யப்படுகிறது.

# செந்தமிழ்க் காஞ்சி செங்கை மாவட்ட தலைநகராகியது

இந்த விழாவை ஒட்டிய சிறப்பு மலர் ஒன்றில் திரு பக்தவத்சலம் "செங்கற்பட்டு மாவட்டத்தின் தலை நகரம்மாவட்டத்துக்கு வெளி இடத்தில் இருப்பது அவ்வளவாகத் திருப்தி அளிக்கவில்லை" என்று எழுதியிருக் கிறார்.

**வழக்கு மன்றம் செங்கற்பட்டிலேயே**

மாவட்டத் தலைநகராக காஞ்சி புரம் ஆனாலும் வழக்கு மன்றத் தலைநகராக செங்கற்பட்டே விளங் கும் என்ற செய்தியை வழக்கறி ஞர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தலைநகரிலேயே எல்லா அதிகா ரங்களும் குவியும் நிலை நீடிக்கக் கூடாது. அது ஏற்றதல்ல. சோழ மண்டலத்தின் தலைமை ஒரு காலத்தில் தொண்டை மண்டலம் இருந்தாலும், துறைமுகப் பட்டினங் களாக மாமல்லபுரமும் சதுரங்கப் பட்டினமும் விளங்கின.

அதுபோல காஞ்சிபுரம் தலைநகராக இருப்பினும் வழக்கு மன்றத் தலைநகராக செங்கற்பட்டு நீடிக்க வேண்டும்.

**காஞ்சியே காரணம்**

முன்பே கூறியிருக்கிறேன். என் னிடமிருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சி புரம் தான் காரணம் என்று.

குறைகள் ஏதாவது இருப்பின் இங்கே பிறந்தும் இப்படிப்பட்ட குறைகள் இருக்கிறதே என்று வருத் தப்படவேண்டும்.

காஞ்சிபுரம் தலைநகர் ஆவதால் மக்கள் பொறுப்பும் அதிகமாகிறது. இங்கே தொழில் வளம் பெருக, வாணிபம், கல்வி வசதி வளர அதிக வாய்ப்புகள் ஏற்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் சென்னை யில் இருந்தால் காரியங்கள் தாமத மாக நடந்ததென்று மக்கள் கருத லாம். இனி அவர் காஞ்சிக்கே வந்திருப்பதால், வேண்டிய வளர்ச்சி களை தேவைகளை விரைவாகவும் விரிவா கவும் அவர் அறிந்து செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சிற்றூர்களுக்கெல் லாம் செல்லும் வாய்ப்பு இருக்கிறது.

**சிறப்பு மிக்க காஞ்சி**

வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சி யில் இன்று வறுமை தாண்டவ மாடுகிறது. நோய் வாய்ப்பட்டவன் முன்னால் உண்ட விருந்தை நினைப் பதுபோல வறுமை வாய்ப்பட்டவர்கள் பழைய நினைப்பை நினைக்கத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட வறுமையை ஓட்ட கைத்தறி நெச வாளர்களும், விவசாயிகளும் தங் கள் தங்கள் தொழில்களை நிலை நிறுத்திக் கொண்டு வளமான வாழ்வை அவர்களுக்குப் பெற்றுக் தர மாவட்ட ஆட்சித் தலைவரும் பிற அதிகாரிகளும் கடமை ஆற்ற வேண்டும்.

மக்களுடன் பழகிகுறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றி னால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்கும் சிறப்பு வரும் கிராம மக்கள் வரும்போது அவர்களை அன் புடன் வரவேற்று காரியங்கள் செய்யக் கூடியதாக இருந்தால் வாக்களித்து- இயலாததாக இருந்தால் இதமாக எடுத்துக் கூறி விளக்கி அனுப்ப வேண்டும். தாமத நிலையை தவிர்த்தி டும் வகையில் அதிகாரிகள் செயல்பட் டால் உண்மையான ஜனநாயகத்தின் பலனை மக்கள் அனுபவிக்கமுடியும்.

**ஜனநாயகத்தின் பயிற்சிக்கூடம்**

ஒவ்வொரு சர்க்கார் அலுவலக மும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூட மாக ஆக வேண்டும், அப்போது தான் ஜனநாயகம் வளரும்.

பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில் ஆபிரகாம் லிங்கன், காந்தியடிகள், கென்னடி ஆகியோர் ஜனநாயகத்தைப் பற்றி மேற்கோள் காட்டி விடுவதால் மட்டும் ஜனநாயகம் வளர்ந்து விடாது. ஒவ்வொரு சர்க்கார் துறை அதிகாரியும் ஜனநாயகத்தை வளர்க் கும் முறையில் பணியாற்ற வேண்டும்.

ஜனநாயகத்தை வளர்க்கும் துறை யில் சர்க்கார் அதிகாரிகள் தங்கள் கட மைகளை செவ்வனே ஆற்றவேண்டும்.

சிங்காரச் சென்னையிலிருந்து, கடற் கரைக் காற்று வீசும் சென்னையி லிருந்து பதிவு பெறு ஊழியர்களை கதகதப்பான இந்த இடத்திற்கு மாற் றியது பற்றி சிலர் கவலைப்படலாம்.

கடற்கரைக் காற்று இங்கு இல்லை. ஒரு புறம் வேகவதியும் மறுபுறம் பாலாறும் இருக்கின்றன. அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால் சென்னையை விட குளிர்ந்த காற்று இங்கே அனுபவிக்கலாம்.

**மன்னர்கள் உண்ட காற்று அலுவலர்களுக்கு**

வேகவதி திட்டம் ஒன்று தீட்டப் பட்டு என்ன காரணத்தாலோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. — இப்போது மீண்டும் அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டால் கடற் காற்றை விட நல்ல காற்றை உண்டு மகிழ லாம். சென்னை கடற்கரை காற்றை மன்னர்கள் உண்டதில்லை வேகவதி—பாலாற்றின் காற்றை மன்னர்கள் உண்டு மகிழ்ந்திருக் கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்துக்கு அழைத்து வந்திருக்கிறோம்.

அரசு ஊழியர்களிடையே கவலை யைப் போக்கத்தக்க வகையில் வசதியுள்ள வீடுகள் கட்டித்தர வேண் டும் என்றும் உத்தரவிட்டிருக் கிறோம்" என்றார் முதலமைச்சர்.

விழாவிற்கு முன்னால், போலீஸ் அணிவகுப்பு நடைபெற்றது. சிறுவர் சிறுமியர் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காஞ்சி தலைநகராகும் விழாவை யொட்டி நகரமே இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கு நோக்கினும் கொடிகளும் தோர ணங்களுமாகக் காட்சியளித்தன. மாவட்டம் முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து விழாவில் பங்கு கொண்டனர்.

# மொரிஷியஸ் தீவினிலே..



(மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து)

[மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள், அண்மையில் மொரிஷியஸ் தீவிற்குச் சென்று மீண்டது அனைவரும் அறிந்ததே. மொரிஷியஸ் தீவின் வனப்பையும் மக்கள் வாழ்க்கையையும் இக்கட்டுரையில் நமக்கு படம் பிடித்து காட்டுகிறார்கள்.

—ஆசிரியர்.]

மொரிஷியஸ் நாடு 7 லட்சத்து 18 ஆயிரம் மக்களைக் கொண்ட நாடு. அதில் 1 லட்சத்து 22 ஆயிரம் மக்கள் தமிழ் மக்கள. தமிழர்களில் 80,000 பேர் இந்துக்கள் மற்றவர்கள் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்கள் தமிழர்களாகக் சென்று வேறு மதங்களை தழுவிக்கொண்டு வாழ்கின்றனர்.

அழகிய சின்னஞ்சிறு மொரீஷியஸ் தீவில் 80 ஆயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். 50 ஆயிரம் பேர் தமிழர்களாகச் சென்று வேறு மதங்களைத் தழுவிக் கொண்டு வாழ்கின்றனர். இவர்களெல்லாம் பல தலைமுறைகளுக்கு முன்னர், பிழைப்புக்காக அங்கு குடியேறியுள்ளவர்கள். ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு கப்பல் மூலம் இந்தியாவுடன் வாணிபம் செய்யப் புறப்பட்ட டச்சுக்காரரர்கள் முதன் முதலில் மொரிஷியஸ் தீவைக் கண்டு, அதனை ஓய்வுத் தளமாகப் பயன்படுத்தினர். இவர்களைத் தொடர்ந்து, பிரஞ்சு, பிரிட்டிஷ் நாட்டாரும் இங்கு தங்கினர். கப்பலுக்கு எண்ணெய் ஊற்றுவது, சுத்தம் செய்வது மற்றும் ஓய்வு பெறுவதற்கும் பயன்பட்ட மொரிஷியஸ் தீவு பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து, பின்னர் ஆங்கிலேயரது ஆதிக்கத்தில் இருந்து அண்மையில் விடுதலை அடைந்தது.

டச்சு, பிரஞ்சு, ஆங்கிலேயர்களால் மொரிஷியஸ் தீவை வளப்படுத்த ஏழை இந்தியர்கள் பெரும்பாலும் தமிழர்கள் இங்கு குடியேற்றப் பட்டனர்.

வெள்ளையர் ஆதிக்க காலத்திலிருந்து மொரிஷியஸ் தீவில் முறையான ஆட்சி நடைபெற்று வருகிறது. 19-ம் நூற்றுண்டிலிருந்தே ஆங்கில பிரஞ்சு பத்திரிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பீகார் மாநிலத்திலிருந்து குடியேறியுள்ள சிவசேகர் ராம் கூலம் என்பவர்தான் சுதந்திர மோரீஸ் தீவின் பிரதமராக இருக்கிறுர். பாண்டிச்சேரியிலிருந்து சென்ற வீராசாமி ரெங்காடு என்பவர் நிதி அமைச்சராக்கப்பட்டுள்ளார். சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஒரு தமிழர்தான் இருக்கிறுர். அதோடு சபாபதி முருகன் எனும் இரு தமிழர்கள் இரண்டு நகராண்மைக் கழக மேயர்களாக உள்ளனர்.

நாம் எப்படி முதலமைச்சரை அண்ணு என்று அழைக்கிறேமோ அப்படி அவர்கள் அவர்களுடைய பிரதமரை சாச்சா என்று அழைக்கிறுர்கள்.

மொரிஷியஸை நான்கு மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறுர்கள். ஊராட்சிகளும் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரை கமிஷனர் என்று அழைக்கிறுர்கள்.

பல தலைமுறைகளாக தமிழகத்துடன் தொடர்பற்று, தமிழ் மொழியைப் பேசும் பழக்க வழக்கமும் அடியோடு அற்றுப்போய் இருக்கும் மோரீஸ் தமிழர்கள், என்னைக் கண்டதும், ஏதோ கனவிலிருந்து விழித்து கொண்டதுபோல, தமிழ் உணர்வும் ஆர்வமும் ஆர்வத்துடிப்பும் மேலிட்டு புத்துயிர் பெற்றுள்ளனர்.

சிலர் என்னை நெருங்கி ''ஊரிலிருந்து வந்தீர்களா: கல்யாணம் ஆகிவிட்டதா ? குழந்

தைகள் இருக்கிறதா-? என்று தமிழில் பேசி மகிழ்ந்தனர். அவர்கள் அனைவரும் முதியவர்கள். இளையோருக்கு தமிழ் தெரியவில்லை.

### கிரியோல் மொழி

பெயரால், மொழியால், இனத்தால் நாம் தமிழர்கள், தமிழ்நாட்டவர்கள், எனும் உணர்வு மட்டும் தான் மொரிஷியஸ் தமிழர்களிடம் காணப்படுகிறது. ஆனால் நடை, உடை, பாவனை. பேச்சு ஆகியவற்றில் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றனர். தமிழ் பேச்சு வழக்கே தெரியவில்லை· கலப்படமான கிரியோல் மொழியில் தான் பேசுகின்றனர்.

பொன்னுசாமி என்னும் தமிழ்ப் பெயரை பொன்னுசாமி என்றும், கோவிந்தன் என்பதை கோவிந்தா என்றும் பிரஞ்சு பாணியில் நீட்டி முழக்கிக் கூறுகின்றனர்.

மொரிஷியஸ் தீவில் மாரியம்மன், மீனாட்சி கோயில்கள் உள்ளன. தை மாதத்தில் மட்டும் திருவிழா நடக்கிறது. வீட்டுக்கு வீடு திருக்குறளும் திருவள்ளுவர் படமும் உள்ளன. ராஜா சர் முத்தையா செட்டியாரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் பல தமிழ் நூல்களை அனுப்பியுள்ளனர்· ஆனால் திருக்குறளை பைபிள் என்றும் திருவள்ளுவரை ஏசு கிறிஸ்து என்றும் பலரும் கூறுமளவுக்கு தமிழத் தொடர்பும் பழக்க வழக்கமும் அற்றுவிட்டிருப்பதாக கூறப்படுகிறது.



மொரிஷியஸ் தமிழர்களுக்குத் தமிழ் கற்றுத் தருவதற்காக பி. ஓ. எல். படித்த பழனி சாமி எனும் தமிழாசிரியர் அங்கே இருக்கிறார், ஆனால் உரல், ஒணான், ஒட்டகம், காக்கை முதலிய படங்களைக் கொண்டு எழுத்துக்களைச் சொல்லிப் புரிய வைக்க அவர் படும்பாடு சொல்லி முடியாது. காரணம் உரல், காக்கை முதலியன அங்கே கிடையாது. எனவே. அந்நாட்டுக்கு ஏற்ற பாடங்களைக் கொண்டு, புதிய புத்தகம் ஒன்றைப் பழனிசாமி தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



தமிழாசிரியர்களையும், இசை, நடனம் முதலிய கலாச்சாரப் பயிற்சியாளர்களையும் அனுப்பி உதவும்படி தமிழர்கள் கேட்டுக் கொண்டனர். தாய்நாட்டுத் தொடர்பைப் புதுப்பித்துத் தொடரவும் துடிக்கின்றனர்.

### கொலையின்மைக்கு விழா

பல்வேறு மொழி, கலாச்சாரம் கொண்ட மோரிஸ் தீவில் கடந்த இரண்டாண்டுகளாக ஒரு கொலை நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. இதனை அவர்கள் ஒரு விழாவாகவே கொண்டாடினர்.

திருமணமுறை எல்லாம் மாலை மாற்றல் தான். அங்குள்ள தமிழர்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று நம் நாட்டுப் பண்பாட்டின்படி தாலி கட்டுகிறார்கள். இங்கிருந்து அங்கு சென்ற ரங்கநாதன், சீனிவாசன் என்பவர்கள் அந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

பெரும்பாலும் அங்கு புடவைக்குப் பதிலாக பெண்கள் கவுன்தான் அணிகிறார்கள். வட இந்தியப் பெண்களும் முக்காடிட்டுக் கொள்வதில்லை. உடையில்தான் மாற்றமே தவிர பெயர்கள் எல்லாம் சிவகாமி, சங்கரி போன்றவைகளாக இருக்கின்றன. அங்கு மில்கள் கிடையாது. பெரும்பாலும் அங்கே வெளிநாட்டுப் பொருள்கள்தான் விற்பனை செய்யப்படுகின்றன. உள்ளூர் உற்பத்தி சாமான்கள் அரிது என்றே கூறலாம்.

சின்னஞ்சிறிய தீவான அங்கு மக்கள் பெருக்கம் அதிகரித்து வருவதும் ஒரு பிரச்னை

# கவனிக்கவும் -
# யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

*பாக்ட் கம்பெனியாரின்*
*உரத் தயாரிப்புகள்*

**பாக்டம்பாஸ்**
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

**அல்ட்ராபாஸ்**
(மிகவும் பொடியாகத் தூளாக்கபபட்ட மினரல் பாஸ்பேட்)

**அமோனியம் ஸல்பேட்**
**சுபர்பாஸ்பேட்**
**N.P.K. கலப்பு உரங்கள்**

FACT

**பாக்ட்** ...யானை மார்க் உரங்கள்

**பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்**
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A



## 128, சின்னமனூர் கூட்டுறவு விவசாய பாங்க் லிமிடெட்

மதுரை மாவட்டம்

திரு வீரப்ப நாயக்கர்
*தலைவர்.*

சேதுராம்
*காரியதரிசி.*

பாங்கிலிருந்து விவசாய முன்னேற்றத்திற்கு—குறுகிய காலக்கடன், மத்திய காலக்கடன் வழங்கி வருகிறோம். விவசாயிகளுக்கு வேண்டிய உரம் சப்ளை செய்கிறோம். மேலும், சேவிங்ஸ் டிபாசிட், கரண்ட் டிபாசிட், பிக்சட் டிபாசிட் பெற்றுக் கொள்ளப்படும்.

சேதுராம்
*காரியதரிசி.*

யாகும். அங்குள்ளோர் குடும்பக் கட்டுப் பாட்டை ஆதரிக்கிறார்கள்.

அங்கு அடிக்கடி புயல் ஏற்படுவதால் பொது வாக வீடுகள் யாவும் மரத்தாலோ அல்லது தகரத்தாலோ தான் கட்டப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் 20 ரூபாய் வாடகையில் வீடு கட்டிக் கொடுத்துள்ளது. 15, 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வீடுகள் தொழிலாளர்களுக்கே உரிமையாகி விடு கின்றன.

பயிர்களில் மிக நல்ல விளைச்சலைக் கொடுப் பது கரும்பு. அந்த மண், கரும்பு விளைவதற் கேற்ப அமைந்துள்ளது, சமீப காலத்தில் நெல் சாகுபடி செய்யத் தொடங்கியிருக் கிறார்கள். தேயிலை போன்றவற்றையும், சாகு படி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

அருமையான தீவு அது. தட்ப வெப்ப நிலை உதக மண்டலம் போன்றுள்ளது. கடலில் உட் கடைகள் இரண்டு கல் தொலைவுக்கு இருப்பதால் அலைகள் கரையில் இல்லை. ஆதலால் கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடித்தும் நீத்தியும் விடுமுறை நாட்களை கழிக் கிறார்கள். கடற்கரையோரமாக வசதியுள்ள வர்கள் குடிசைகளை அமைத்துக்கொண்டிருக் கிறார்கள்.

அங்கு வானொலி நிலையம் இருக்கிறது. மொரி ஷியஸ் வானொலி கார்ப்பரேஷன் என்று இருக் கிறது. அதில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்வதில்லை. தமிழ் நிகழ்ச்சிகள் மொரிஷியஸ் மக்கள் கேட்கும் வகையில் ஒலிபரப்பத் தக்க ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

நாம் செய்யவேண்டியவை.

மொரிஷியஸ் தமிழ் மக்களுக்கு நாம் செய்ய வேண்டியவைகள் வருமாறு :—

1. வானொலியில் தமிழ் ஒலிபரப்ப வகை செய்யவேண்டும்.

2. தமிழ் இசைத் தட்டுகள், ரிகார்டர்கள் போன்றவற்றை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. அங்கிருந்து தமிழ் நாடு வந்து கல்வி கற்க மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வது.

4. இங்கிருந்து கணவன் மனைவியாக உள்ள கருநாடக இசை நடனம் அறிந்தவர்களை அங்கே அனுப்பி, அக்கலையைப் பரவச் செய்வது.

5. தமிழ் ஆசிரியர்களை அனுப்பி வைத்து தமிழ் கற்க அவர்களை ஊக்கமளிப்பது.

6. தமிழ் பத்திரிகைகள், தமிழ் இசைகள் ஆகியவற்றைக் கேட்டும் இன்புறச் செய்ய ஏற்பாடு செய்வது.

மோரிஸ் தீவில் 72 ஆயிரம் வானொலிப் பெட்டிகளும், 11 ஆயிரம் டெலிவிஷன்களும் உள்ளன.

பிழைப்பு தேடி எங்கோ சென்று, தமிழ்ப் பேச்சு, பழக்கத்தை மறந்து கிடைக் கும் மோரிஸ் தாய் தமிழகத்துடன் மீண்டும் தொடர்பும் அதன் மூலம் மீண்டும் தமிழ வாழ்வையும் பெறுவதற்கு அம்மக்கள் பேருக்கம் காட்டுகின்றனர்.

---

## 'கிராம நலம்' சிறப்பு வெளியீடு

தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பெயர் கள் அடங்கிய மாவட்டவாரியான சிறப்பு வெளியீடு ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வெளியீட்டில் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் பொறுப்பேற்று நற்பணியாற்றிவரும் தலைவர்களின் பெயர்களுடன் தமிழக சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் நாடாளுமன்ற, மாநிலங் கள் அவை உறுப்பினர்களின் பெயர்களும், தன்னகத்தே கொண்டு அது வெளிவரும்.

'கிராமநலம்' இதழிற்கு ஆண்டுச் சந்தா அனுப்பியுள்ள அனைவருக்கும் அச்சிறப்பிதழ் இலவச மாக அனுப்பி வைக்கப்படும். தனிப் பிரதி விலை ரூபாய் ஒன்று.

# எத்தனை கோடி வெற்றி ...

(மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி.)

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத வெற்றி என்றே சங்கே முழங்கு' என்று பட்டி தொட்டி எல்லாம் முழக்கம் கேட்கும் நாளிது. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் ஒன்றுபட்டு உழைப்பதால் அரும்பெரும் செயல்களை எளிதில் நிறைவேற்றி வெற்றியைக் குவிக்கிறார்கள் என்பதை காண்கிறோம்.

அந்த வெற்றி வரிசையிலே இணைத்து, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அறிய தொரு சாதனையை சேலம் மாவட்டம் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினர் வெள்ளரி வெள்ளியில் செய்து முடித்திருப்பதை நெஞ்ச நிறைவோடு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பாராட்டியுரைத்திருப்பதை கட்டுரை வடிவில் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் செய்தால் எவ்வளவு நல்ல ஆக்க வேலைகளைச் செய்து முடிக்க முடியும் என்பதை இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் நமக்கு மிகத் தெளிவாக காட்டுகின்றன.

பொறுப்புள்ள மிகவும் பயன்தரத்தக்க மற்றவர்களுக்கெல்லாம் வழி காட்டத் தக்கச் செயல்கள் இடைப்பாடி ஒன்றியத்தில் நடைபெறுகின்றன.

கோனேரிபட்டியில் பள்ளிக்கூட தோட்டம் அமைப்பதற்காக ஏறத்தாழ ஒன்றரை ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுத்து செப்பனிட்டுச் சீராக்கப்படுகிறது. அதை மிஞ்சத்தக்கவகையில் நல்லஊருக்கு அருகில் இவ்வளவு காலமாக புறம்போக்கு என்று போடப்பட்டிருந்த நிலத்தை சீராக்கும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந் நிலத்தின் மதிப்பு, இப்போதைய நிலவரப்படி ரூ. 75,000. சீர் படுத்தி, செப்பனிட்டு நல்ல தண்ணீர் வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி பயனுள்ளவகையில் பயிராக்கினால் மேலும் விலை மதிப்புள்ளதாக ஆக்க முடியும்.

## ஓராண்டுத் திட்டம்

இப்படிப்பட்ட அருமையான பூமி இவ்வளவு நாளாகப் பயன்படுத்தாமல் இருந்ததை மாற்றி, இன்றைக்கு இந்த முயற்சியில் ஈடு பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை ஒட்டி சமுதாயத்திற்கு நன்மைத் தரத்தக்க திட்டங்கள் என யாதாகிலும் செய்ய முடியுமா என்று நான் நினைத்து நினைத்து பார்த்து, இது போல் புறம்போக்கு நிலங்கள் வேண்டுமென்ற ஓர் எண்ணத்தைக் கொண்டு, அது போலவே சமுதாய நலக் கிணறு அமைக்க, கிராமப் புறத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு உழவுக் கருவிகள், மருந்து தெளிக்கின்ற கருவிகள், கல்லை உடைக்கின்ற கருவிகள், கிணற்றை ஆழப்படுத்துகின்ற கருவிகள் இப்படிப்பட்ட கருவிகளை எல்லாம் வாங்கித்தந்தால், அவர்கள் அதைப் பயன் படுத்தி மேலும் விளைச்சலைப் பெருக்க முடியும் என்கிற அந்த அடிப்படையிலேதான் ஓராண்டு என்ற அந்த திட்டத்தினை வெளியிட்டேன்.

ஓராண்டு திட்டத்தினுடைய உண்மையான நோக்கங்களை உணர்ந்த கிராம மக்களும் சிரமதானிகளும் தங்களை முழுமையாக ஈடுபத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வெள்ளரி வெள்ளி ஊராட்சி மன்றத்தின் சார்பாக 5 ஏக்கர் நிலத்திற்கு மேலாக தேர்ந்தெடுத்து, அதனைப் பக்குவப்படுத்தி, பயன்படுத்தி, பயனுள்ள நிலமாக மாற்றி, அதிலிருந்து வருகின்ற விளைச்சலைக் கொண்டு இந்த பகுதியில் இருக்கின்ற இந்தக் கிராமத்தைச் சார்ந்த பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கான மதிய உணவினை ஒரு பொது இடத்திலே வைத்து, சமைத்து வழங்குகின்ற முயற்சி மிகச் சிறந்ததாகும். செப்பனிடப்பட்டு வரும் தோட்டத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கூலிக்கு வேலை செய்கின்ற ஆட்களை தயவு செய்து அமர்த்தக்கூடாது.

இருப்பினும் நம்மாலே இயலாமல் இயந்திரங்களைக் கொண்டோ அல்லது மாடுகளைக் கொண்டோ செய்ய வேண்டும் என்ற வேலைகளைத் அப்படிப்பட்ட முறையில் செய்ய வேண்டும். அந்த முறையில் ஆசிரியர் பெருமக்களும், மாணவர்களும் சிரமதானிகளும் சேர்ந்து

அந்தத் தோட்டத்தை வளமுடையதாக ஆக்க வேண்டும். வெள்ளரி வெள்ளியிலுள்ள தோட்டம் மட்டுமல்லாமல் இன்னும் இடைப்பாடி ஒன்றியத்திலே ஓர் ஐந்தாறு இடங்களிலே இதுபோல் புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்தி, பொது மதிய உணவு மையம் அமைப்பதற்கான, விளைச்சலை பெருக்குகின்ற திட்டங்களை மேற்கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருப்பதாக அறிந்து மகிழ்கிறேன்.

## முதலமைச்சரின் கருத்துரை

சில நாட்களுக்கு முன்னால் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ''கிராம நல'' பத்திரிகைக்கு அவருடைய கருத்தை எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தோம். முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வுரை கொடுத்திருக்கிறார்கள். ''இந்த பத்திரிகைகளில் அமைச்சர்களுடைய படங்களையும், தலைவர்களுடைய படங்களையும் நடக்கின்ற விழாக்களில் அவர்கள் மேடையில் உட்கார்ந்து இருக்கின்ற காட்சிகளையும், படமாக்கி கொடுப்பதிலே எனக்கு மகிழ்ச்சி இல்லை. அங்கங்கே சீரணி நண்பர்கள் ஆற்றுகின்ற பணியினையும், பள்ளிக்கூட மாணவர்களும், ஆசிரியர்களும் செய்கின்ற காரியங்களையும் அவர்கள் நடவு நடுகின்ற காட்சிகளையும் அவர்கள் பாதை அமைக்கின்ற காட்சிகளையும் அவர்கள் பள்ளிக்கூடம் கட்டுகின்ற காட்சிகளையும், அவர் வேளாண்மைத் துறையில், ஈடுபட்டுச் செயலாக்குகின்ற காட்சிகளையும், படமாக்கி வெளியிட்டு பயன்பெற முடியும்'' என்ற கருத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

அப்படி அவர்கள் எழுதிக் கொடுத்ததற்கு இன்றைக்கு நல்ல பல புகைப்படங்களை நான் பெற்றுச் செல்கின்ற வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. படங்கள் அடுத்த இதழில், நல்ல பல பணியாற்றுகின்ற அந்த சூழ்நிலையில் அறிஞர் அண்ணா அவர்களுக்குக் காணிக்கை ஆக்க ஒரு நல்ல அருமையான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சென்னைக்குச் சென்றவுடன் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து, ஓராண்டு திட்டத்தில் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் இன்னின்ன வேலைகளை எடுத்துச் செய்கிறார்கள். மனநிறைவு அளிக்கத்தக்கதாக இருக்கிறது. அவசியம் நீங்கள் அங்கு செய்து வருகின்ற காரியங்களை எல்லாம் போய் பார்த்து வர வேண்டும் என்று எப்படியாவது வாதாடி அவசியம் உங்களுக்கு ஒரு நாள் தேதியும் வாங்கிக் கொடுத்து இடைப்பாடி தொகுதிகளை எல்லாம் பார்க்கச் செய்வேன்.

இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் அவர்கள் மிக சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள்.

சீரணியை, அறிஞர் அண்ணா அவர்கள் அதிகமாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு அவர்களாலே காரியம் சாதிக்க முடியும் என்று நம்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களை ஆற்றுகின்ற அருமை நண்பர்களை வழி நடத்தி செல்லுகின்ற பொறுப்பை என்னாலே சரியாக நிர்வகிக்க முடியும் என்று கருதி, அமெரிக்காவிற்கு செல்லுகின்ற நேரத்திலே அந்த பொறுப்பை ஒப்படைத்தார்கள். திரும்பவும் என்னிடத்திலேயே கொடுத்து தொடர்ந்து செயலாற்றச் சொல்லியிருக்கிறார்கள்.

## ஏற்றம் காண உறுதி

மக்களுடைய நம்பிக்கையும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் நிச்சயமாக கிடைக்கும். எடுத்துக் கொண்டு இருக்கின்ற அந்தத் துறையில் என்னால் ஏற்றம் காண முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். இப்படிப்பட்ட பயன் உள்ள திட்டங்களைச் செய்திருக்கின்ற ஒன்றியங்களுக்கு நான் என்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் பள்ளிக்கூடத்திலே ஆசிரியனாக இருக்கின்ற காலத்திலேயே நாமக்கல்லில் நகர் புறத்திலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் ஒரு பொதுவான இடத்திலே உணவு சமைத்து வழங்குகின்ற முயற்சியை மேற்கொண்டால். அதனால் ஆசிரியர்கள் படுகின்ற அல்லல், தொல்லைகள் எல்லாம் நீங்குமென்றும், மாணவர்களுக்கு நியாயமாக உணவு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் ஊராட்சி ஒன்றியத்தின் துணையோடு, பொது மதிய உணவு மையம் ஒன்றை ஓர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னரே என்னுடைய முயற்சி எடுத்து நிறுவினேன். ஆயிரம் மாணவர்கள் அதிலே உணவு உண்டு வருகிறார்கள். அன்று தொடங்கி இன்று வரை அது சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. அந்த முயற்சியினுடைய விளைவாகத் தான் நாம், நம்முடைய நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இப்படிப்பட்ட பொது மதிய உணவு மையங்களை நிறுவி வருகின்றோம்.

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல.

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

சுத்தமான தேன்! சிறந்த உணவு!!
உயர்ந்த மருந்துப் பொருள்!!!

## மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் லிட்.,

## எண் 2050, கன்னியாகுமரி மாவட்டம்

நாங்கள் சுத்தமான அக்மார்க்கு செய்த தேனும், தேன் எடுக்கும் கருவிகளும் மிதமான விலைக்கு சில்லறையாகவும் மொத்தமாகவும் ஆர்டர்களின்மேல் அனுப்பிக் கொடுக்கின்றோம்.

பர்ணபாஸ்,
தலைவர்.

அதேபோல் வெள்ளரி வெள்ளியில் ஏறத்தாழ 250 மாணவர்களுக்கு ஒரே இடத்திலே சமைத்து, உணவு அளிக்கின்ற முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனாலே ஆசிரியர்களுக்கு இருக்கின்ற தொல்லை குறையும். உணவு வீணாவது தவிர்க்கப்படும், மாணவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான உணவு சத்துள்ள உணவு கிடைக்கும். இங்கே இருக்கின்ற அனைவருடைய முயற்சியினாலும், கோழிப்பண்ணை எல்லாம் வைத்து, வளர்த்து அதிலே இருந்து கோழி முட்டைகளையெல்லாம் எடுத்து, மாணவர்களுக்கே பயன்படுத்துவதாக அறிந்தேன். இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலேயே ஒரு கோழிப் பண்ணை வைத்து, அதிலே கிடைக்கிற முட்டைகளை எடுத்து, நல்ல மாணவர்களுக்குச் சத்துள்ள உணவாக கொடுக்கின்ற காட்சியைப் பார்க்கின்ற பொழுது, நாம் கல்வித் துறையிலே எந்த அளவிற்குக் கவனம் செலுத்துகிறோம் என்பதை எண்ணி, எண்ணி பெருமகிழ்வு அடைகிறேன். இந்த முட்டைகளை மாணவர்களுக்கு நல்ல முறையில் பயன்படுத்தத் தக்க வகையில் செயல்படுவது மிகச் சிறப்பான பணியாகும்.

### மதிய உணவிற்கு புதிய முறைகள்

இந்த இடைப்பாடி ஒன்றியத்திற்கு சத்து உணவு திட்டத்தையும் இந்த ஆண்டிலே அமுல்படுத்துவதற்குத் தொடர்புடைய அதிகாரிகளைக் கலந்து ஆவன செய்யப்படும். அது கிடைக்குமானால் மேலும் நல்ல பல உதவிகளும் கிடைத்து, இதுபோல கோழிப்பண்ணைகளை ஒவ்வொரு இடத்திலும் ஆரம்பிக்கின்ற வசதிகளையும், வாய்ப்பினையும் பெற முடியும். அதுவுமல்லாமல் அமெரிக்க 'கேர்' நிறுவனத்தார் மதிய உணவு சமைக்க மையம் அமைப்பதற்காக ஒரு திட்டத்தை இன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை மாவட்ட வாரியாக எடுத்துச் செயலாற்றுவதாக இருந்தது. ஆனால் அதை இப்பொழுது மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட சில இடங்களை எடுத்துக் கொண்டு அங்கே இந்தப் பொது மதிய உணவு மையத்தை அமைக்கிற ஒத்துழைப்பை அவர்கள் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

அதாவது ஒரு ஐந்து அல்லது பத்து ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய பகுதியை அவர்களுக்குக் காட்டினால் அந்த நிலத்தில் கிணற்றை வெட்டிக் கொடுத்தால், அதிலே பம்பு செட்டுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் விவசாய கருவிகளை வழங்குவதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கின்ற நெல்லினைக் கொண்டு, ஒரு மத்திய இடத்திலே உணவு சாலை அமைத்து விஞ்ஞான முறைப்படி உணவைத் தயாரித்து, தயாரிக்கப்பட்ட உணவுகளை நல்ல வாகனங்களிலே, வைத்து எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புகின்ற அந்த ஒரு திட்டம் அவர்களிடத்திலே நடைமுறையிலே இருக்கின்றது.

### துணைநின்று செயலாற்ற வேண்டும்

வெள்ளரி வெள்ளியில் எனக்கு நீங்கள் ஏராளமான நிலங்களை காட்டி இருக்கிறீர்கள். கிணறுகளைகூட வெட்டிவிட்டீர்கள். மின்சார இணைப்புக்களைகூட பொறுத்தி விட்டீர்கள். இனிமேல் செய்ய வேண்டியதெல்லாம் அந்த நிலங்களைச் சீர்திருத்தி, செப்பனிட்டுப் பயன்படுத்துவதற்காக கருவிகளையும், அதிலே இருந்து விளைச்சலை எடுத்து, ஒரு மத்திய இடத்திலே சமைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுவதுதான்.

அப்படிச் செய்தால் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியம் முழுமைக்கும் ஒரே இடத்திலிருந்து உணவு சமைத்துக் கொடுக்க முடியும். அந்தத் திட்டத்தை இந்த இடைப்பாடி ஒன்றியத்திற்குத் தருவதற்கு நான் நிச்சயமாக முடிவு எடுப்பேன். இப்படிப்பட்ட இடங்கள் கிடைக்கவில்லையே என்றுதான் நாளெல்லாம் உள்ளபடியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன், இடைப்பாடியிலுள்ள உள்ள கல்வித் துறை அதிகாரிகளும், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளும், மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்களும் கலந்து பேசி, அதை எந்த இடத்திலே அந்த மதிய உணவுச் சாலையை அமைத்தால் சிறப்புடையதாக இருக்குமென்று கருதி, அதனை நீங்கள் அமைத்துக் கொடுத்தால், அதன் மூலமாக அவர்கள் உணவுகளை வழங்குகின்ற காரியங்களை எல்லாம் செய்து கொடுக்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்த காரியங்கள் எல்லாம் நடைபெற வேண்டுமானால் அதற்கு எங்கோ இருந்து வருகின்ற உத்தரவு அடிப்படையாக இருந்த பயன் இல்லை. இவ்வளவு பெருந்தன்மையோடும் மற்ற நாட்டுக்காரர்கள் நமக்கு உதவி செய்ய

[18-ம் பக்கம் பார்க்க.[

நகர்ப்புறங்களில் மக்கள் தொகை மிகுதியாகி நெருக்கடியே நிறைந்திருக்கிறது. மக்களுக்குத் தேவைப்படும் பால் வழங்கும் பொருட்டு, கால்நடைகளும் நகரங்களின் மத்தியிலே கட்டிக் காக்கப்படுகின்றன. இந்தக் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் எளிதாக மனிதர்களுக்கும் பரவ முடிகிறது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களையும், அதற்கான தடுப்பு முறைகள் பற்றியும், அதற்காக நகராட்சிகள் மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு முறை குறித்தும் தெளிவாகக் கூறுகிறது இக்கட்டுரை—ஆசிரியர்.

# விலங்கின வளர்ப்பு—நகராட்சிகளின் பொறுப்புகள்

[டாக்டர் ஐ.டி. மந்திரமூர்த்தி, ஜி. எம். வி. சி., பி.வி. எஸ்ஸி. இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, தமிழக அரசு]

அறிவியல் வளர்ந்து அனைத்தும் இயந்திர மயமாகி வரும் இந்நாளில் கூட கால்நடைகளின் முக்கியத்துவம் சிறிதும் குறையவில்லை. மாறாக சத்துணவு வழங்குவதில் இவைகளின்தேவை நாளுக்கு நாள் உயர்ந்துக்கொண்டே போவதை கண்கூடாகக் காண்கிறோம். பால், இறைச்சி, முட்டைபோன்ற கால்நடை உணவுப் பொருட்கள் சத்துணவுகளாக விளங்குவது மட்டுமின்றி தானிய உணவுப் பற்றுக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்வதற்கும் உறுதுணையாக இருக்கிறது. நம் பாரத நாட்டில் விவசாய வேலைகளுக்கும், உரத்திற்கும் கால்நடைகளின் இன்றியமையாமை இன்னும்பல நூற்றுண்டுகளுக்கு நீடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கால்நடை அபிவிருத்தியிலும் அவைகளின் சுகாதாரத்திலும் கிராமங்கள் அதிகப்பங்கு வகிக்கின்றன என்பது உண்மையே, இருப்பினும் பல கிராமங்களை மையமாகக்கொண்டு விளங்குகின்ற நகர்ப்புறங்களிலும் கால்நடை பராமரிப்புப் பணிகள், குறிப்பாக கால்நடைகளின் நோய்கள், அவற்றின் சிகிச்சை, தடுப்பு, இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துதல், பால், இறைச்சி இவைகளின் ஆய்வு, கால்நடை சந்தைகள், பால் வற்றிய பசுக்களின் பராமரிப்பு, கால்நடை வளர்ச்சி ஆகிய பல் வேறு பணிகளிலும் நகராட்சி மன்றங்களின் பொறுப்புகள் பற்றி சற்று ஆராய்வோம்.

**கால்நடைகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்கள்:**

கிருமிகளாலும், நுண்ணுயிர்களாலும் தோன்றும் ஒரு சில நோய்கள கால்நடைகளை முக்கியமாக தாக்குவது மட்டுமின்றி மனிதர்களுக்கும் பரவலாம். இவைகளில் நாய்வெறி நோய் மாடுகளின் க்ஷயரோகம் (Tuberculosis) ப்ரூசில்லா நோய் அடைப்பான், கோமாரி மாட்டம்மை போன்ற நோய்கள் முக்கியமானவைகளாகும்.

வெறிகொண்ட நாய்கள் மனிதர்களைக் கடிக்கும் பொழுது மனிதர்களுக்கு ஹைட்ரோ போபியா என்ற வெறிநோய் உண்டாகி, மனிதனும் நாய்போல் குலைத்து, பாடுபட்டு இறந்துவிட நேரிடுகிறது. ஒருமுறை நோய் கண்டுவிட்டால் அதை மருந்துபோட்டு குணப் படுத்தமுடியாது. மனிதன் இறப்பது நிச்சயம். நகராட்சி பகுதிகளில் இதற்குரிய தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

1. நகரிலுள்ள நாய்களுக்கு லைசென்ஸ் வழங்குவதோடு அவ்வாறு லைசென்ஸ் இல்லாத நாய்களை பிடித்து அழித்துவிடுதல் நலமாகும். லைசென்ஸ் வழங்கும் எல்லா நாய்களுக்கும் வெறிநாய் தடுப்பு மருந்து போட்ட பிறகுதான் லைசென்ஸ் கொடுக்கவேண்டும்.

2. ஏதேனும் ஒரு நாய்க்கு வெறிநோய் வந்திருக்கிறது என்று சிறிது தெரிந்தாலும் உடனே கால்நடை மருத்துவருக்கு செய்தி அனுப்பி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

3. இத்தகைய நாய் யாரையேனும் கடித்திருந்தாலும் உடனே அவர்களுக்கு தடுப்பு ஊசிகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். இக்கொடிய நோயை தடுப்பதில் கால்நடை மருத்துவருடன் நகராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு மிகத் தேவை.

க்ஷயரோகம் கொண்ட பசுவிலிருந்து கறக்கும்பாலை நன்கு காய்ச்சாமல் அருந்துவது, இத்தகைய

நாய் கண்ட மாடுகளுடனே அதிகநேரம் இருப்பது போன்ற காரணங்களினுல் மனிதர்களுக்கும் க்ஷயரோகம் பரவலாம். இத்தகையமாடுகளை தனியே அப்புறப்படுத்தி, அவைகளை பரிசீலித்து, வியாதியற்றவைகளை தூய்மையுடன் நன்ருகப் பேணி, சுற்றுப்புறங்களை தூய்மையுடன் வைத்துக்கொள்வது இன்றியமையாததாகும்.

'ப்ருசில்லோசிஸ்' என்ற மாடுகளைத் தாக்கும் ஒருவித நோயும் மனிதர்களுக்கு வரலாம். இதனுல் விட்டு விட்டு அடிக்கும் காய்ச்சல், உடல்வலி, மூட்டுகளில் வலி போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டு, சில சமயங்களில் இறப்பும் நேரிடும். இத்தகைய நோய்கண்ட மாடுகளையும் தனிப்படுத்தி கால்நடை மருத்துவரின் உதவிகொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

மாடுகளுக்குத் தோன்றும் அடைப்பான் நோய்க் கிருமிகளும் மனிதர்களை தாக்குவதால் உடல் புண் ஏற்படும். எனவே அடைப்பான் நோயினுல் இறந்த மாடுகளையும் ஆடுகளையும் கிருமிநாசினிகள் தூவி ஆழப் புதைத்துவிட வேண்டும். அவை தவிர மாட்டு அம்மை, கோமாரி ஆகிய நோய்கள் கண்ட மாடுகளை கையாளும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்நோய்கள் கண்ட பசுகளிடமிருந்து கறக்கும் பாலை நன்கு காய்ச்சிக் குடிக்க வேண்டும். கால்நடைகளுக்குத் தோன்றும் ஒருசில குடற் பூச்சிகள், உண்ணிகள், பேன்கள் மனிதர்களுக்கும் பரவலாம். இதற்கு தக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**கால்நடைகளின் சிகிச்சை:**

மனிதர்களைப்போலவே கால்நடைகளுக்கு தோன்றும் உடற்கூறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் நகராட்சி களுக்கு பெரும் பங்கு உண்டு. கால்நடை மருத்துவமனை நகரில் நன்முறையில் செயல்பட்டு மக்களுக்கு தேவை யான சேவை செய்யவேண்டுமானுல் அங்குள்ள நக ராட்சிகள் அக்கால்நடை மருத்துவமனையின் வளர்ச்சியில் ஊக்கமும் ஆக்கமும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**கால்நடை அபிவிருத்தி:**

நகரில் பெரும்பாலும் பாலுக்காக மாடுகள் வளர்க்கப் படுகின்றன. அவற்றின் தரத்தை உயர்த்சவதில் நாமெல்லோரும் ஈடுபடவேண்டும். தரம் உயர்த்தப்பட வேண்டுமானுல் முதன்முதலில் தரமற்ற காளைகளைக் காயடித்து குறைத்துவிடவேண்டும். பிறகு இம்மாடுகளை உயர்ரகப் பொலிக்காளைக்கொண்டு, செயற்கைமுறையில் கருத்தருவித்தல் நலமாகும். இதனுல் பால் கொடுக்கும் அளவை பெருக்கலாம். பெரும்பான்மையான நகரங்களில் செயற்கை இனமுறை வளர்ச்சிநிலையங்கள் பணிபுரிகின்றன. இந்நிலையங்களின் சேவையையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். மேலும் நகர் வாழ்மக்கள் தங்கள் வீடுகளில் கோழிகள் வளர்க் கவும், ஆடுகளை அதிகரிக்கவும், பன்றிகளைப் பராமரிக்கவும், பலவித உதவிகள் அளிக்கப்படுகின்றன.

மாட்டுப்பாலின் மூலம் பல நோய்கள் மனிதர்களுக்கு பரவுவதால் தக்க கால்நடை வைத்தியரைக் கொண்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் பாலை பரிசோதனை செய்து, அதன்பிறகு வழங்கும்படி செய்யவேண்டும். நகராட்சிகளின் கீழ் உள்ள பால்பண்ணைகளையும்



கால்நடை மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்கும் படி செய்தல்வேண்டும். பாலில் கலப்படம் ஆகாதவாறும் பார்த்துகொள்ளவேண்டும்.

**இறைச்சி ஆய்வு:**

நகரில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் இறைச்சியை யும் தக்க கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்குப்பிறகே விநியோகிக்கப்படவேண்டும். ஏனென்ருல் இறைச்சியின் மூலம் நோய்கள் மனிதர்களுக்குப் பரவும். ஆடு மாடு இறைச்சிக்காக வெட்டுவதற்கு முன்பும் வெட்டிய பிறகும் கால்நடை மருத்துவர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றன. மனிதர்கள் உண்ணதகாதது என்று ஒதுக்கப்படும் இறைச்சியை விநியோகம் செய்யாதவாறு பார்த்துக்கொள்ளல் மிகவும் அவசியம்.

நகராட்சிகளுக்கு போதிய பணவசதி இருந்தால் பால் வற்றிய பசுக்களுக்கு தனியே ஒரு பண்ணை அமைத்துப் பராமரிக்கலாம். கால்நடைகள் வயதாகி அவை பயனற்று போகும் காலத்தில் அவற்றைக் கருணை உள்ளம் கொண்டு காக்கவேண்டுமானுல் கால்நடைப் பட்டிகளை நிறுவி அவை களில் இத்தகைய கால்நடைகளைப் பராமரிக்கலாம். மாடுகளும், மற்றைய பிராணிகளும் தெருக்களில் திரிந்து போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் செய்ய இந்த ஏற்பாடு வழி செய்கிறது. நகரில் பணவசதி படைத்தவர் களும், இதற்கென நன்கொடைகள் வழங்கி இத்தகைய கால்நடைப் பட்டிகளைப் பராமரிப்பது ஓர் சிறந்த போற்றற் குரிய செயலாகும்.

# வெற்றியின் அழைப்பு

ராம்தா சின்னஞ் சிறிய கிராம மாகும். சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள பாரா பலி வட்டாரத்திலிருந்து மூன்றுகல் தொலைவிலுள்ள ஊர் அது.

ராம்தாவில் முன்னூறு வீடுகள் உள்ளன. இவ்வூர் மக்களில் பெரும் பாலோர் குலுதா வகுப்பு மக்கள் ஆவார்கள். குலுதா வகுப்பு மக்கள் விவசாயத்தில் கெட்டிக்காரர்கள் என்பது சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள அனைவரும் அறிவர். அது மட்டுமல்ல, சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள சாகுபடி நிலத்தில் முக்கால் பகுதி நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் குலுதா வகுப்பு மக்கள்தாம்.

1960–ம் ஆண்டு வரை ராம்தாவில் ஒரு போகம் மட்டும் சாகுபடி செய்வார்கள். குறுகிய கால பயிர் பருவத்தில் மட்டும் நெல் சாகுபடி செய்வார்கள். பாசனத்திற்கு மழை நீரையே நம்பியிருந்ததால் அவர்கள் பெரும் அவதிக்கு ஆளாகவேண்டியிருந்தது. மழை பெய்துவிட்டால் நீண்டகாலப் பயிர் பருவத்திலும் கோதுமை, நெல், நிலக்கடலை உருளைக் கிழங்கு முதலியவற்றை பயிர்செய்ய முடியாமல் தவித்தார்கள். பெரும் பகுதி சாகுபடி நிலங்களுக்குப் பாசன வசதிகள் மிகவும் தேவைப்பட்டன.

### வெற்றிக்கு நல்வரவு

திரு. செலுபிரதான் ஆர்வத் துடிப்புள்ள அவ்வூர் விவசாயி. அவர்தான் வேளாண்மைத்துறையில் புத்தம்புதிய முறைகளை கையாள முன் வந்தார். ராம்தாவில் திரு செலுபிரதானுக்குப் பதினைந்து ஏக்கர் நிலம் உள்ளது. 1967-ஆம் ஆண்டில் உயர் ரக நெல்லான ஐ. ஆர். 8 போன்ற ரக நெல் ரகங்களைப் பயிரிட்டார்.

அண்மையிலுள்ள வட்டாரங்களில் நல்ல முறையில் சாகுபடி செய்பவர்களைச் சந்தித்து அவர்கள் சாகுபடி செய்வதில் கையாளும் புதிய முறைகளை அறிந்தார், செலுபிரதான். மேலும் அவர் உள்ளூரிலேயே உள்ள கிராம நல ஊழியரிடம் தமது புதிய சாகுபடி முறைக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார். பின்னர் செலுபிரதான் பாரபல்லி வட்டார வளர்ச்சி அதிகாரியைச் சந்தித்து, விவசாய அதிகாரி ஒருவரை அனுப்பி தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கும்படி வேண்டிக் கொண்டார்.

செலுபிரதான் விருப்பத்திற்கிணங்க விவசாய அதிகாரியும், கிராம நல ஊழியரும் ராம்தாவுக்குச் சென்று, ஐ. ஆர். 8 மற்ற புதிய நெல் ரகங்களைப் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்கள். இரசாயன உரங்களைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை யும் விளக்கினார்கள்.

இரசாயன உரங்களை எப்படி, எப்போது பயன்படுத்துவது என்பதைப் பற்றிய விவரங்களை எல்லாம் செலுபிரதானுக்கு கிராம ஊழியர் எடுத்துரைத்தார். ஆகவே, 1967-ம் ஆண்டில் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் ஐ. ஆர். 8 நெல் ரகத்தைப் பயிரிட்டார் செலுபிரதான். ஆனால் பயிர்களுக்குத் தேவையான இரசாயன உரங்களை வாங்குவதில் செலுபிரதானுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டன.

### கைமேல் பலன்

செலுபிரதான் ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 360 வரை செலவிட்டார். ஓர் ஏக்கருக்கு இவ்வளவு செலவிடுவது பெருந் தொகைதான் எனினும் செலுபிரதான் தயங்கவில்லை. அதன் விளைவாக கைமேல் பயன் கிடைத்தது.

மிகு விளைச்சல் தரக்கூடிய உயர்ரக வித்துகளைப் பயன்படுத்தியதால் விளைச்சலும் மிகுதியாக இருந்தது. அந்தப் பக்கத்தில் யாருக்கும் செலுபிரதானுக்கு விளைந்ததுபோல் விளைச்சலில்லை. ஓர் ஏக்கர் நிலத்திற்கு மட்டும் 75 மணங்கு நெல் விளைந்தது.

செலுபிரதானின் கடின உழைப்பும் புதிய முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் வெற்றியின் அடிப்படையாகிவிட்டன. சுற்றுப்புற வட்டாரங்களுக்குச் செலுபிரதான் மிகுவிளைச்சலுக்கு வழிகாட்டியாகிவிட்டார். அவரை குலுதா வகுப்பினர் பின்பற்றுவதில் தயக்கம் காட்டுவார்களா என்ன? வெற்றியின் அழைப்பை விரும்பாதாருண்டோ?

# பட்டம் பெற்றவர்கள்

**கல்லூரிகளில் படித்துப் பட்டங்கள் பல பெற்றவர்கள் அலுவலகங்களில் அதிகாரிகளாகவும், விஞ்ஞானிகளாகவும்தான் பணியாற்ற வேண்டுமா? வேளாண்மையில் கவனம் செலுத்தி வயல்களில் இறங்கி, நிலங்களை உழுது, உணவு உற்பத்தியைப் பெருக்கலாகாதா?**

**ஏன் முடியாது? ஏன் கூடாது? இக் கேள்விகளுக்கு விடையளிக்கின்றனர் உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் உள்ள படித்து பட்டம் பெற்று, முன்னேடிகளாகத் திகழும் இளைஞர்கள், அவர்கள்கைப் பட்ட இடங்களெல்லாம் தங்கங்களாக மாறுகின்றன.**

இவ்விரு மாநிலங்களிலுமுள்ள சில படித்த இளைஞர்கள தமது அலுவலகப் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு, வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், தங்களது வயல்களை அமைத்துள்ள விதமே அலாதி அழகைத் தருகிறது. நவீன முறைகளைக் கையாண்டு, புதிய உத்திகளைப் புகுத்தி, மிகுவிளைச்சல் தானியங்களை விளைவிக்கும் பொருக்கு விதைகளைக் கையாண்டு, பெருமளவில் உற்பத்தி செய்து குவிக்கின்றனர்.

**விவசாயமே மூச்சு**

இப்பகுதி வாழ் மக்களுக்கு இதே ஒரு பேச்சாக இருக்கிறது. அரசுப் பதவிகளிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் சில பெரிய அதிகாரிகள்கூட தமது வேலையைத் துறந்துவிட்டு, இப் பட்டதாரி உழவர்கள் போன்று, வேளாண்மையில் தீவிரமாக ஈடுபடலாமா வென்று யோசித்து வருகின்றனர். அந்த நிலைக்கு, இந்த இளைஞர்களின் விவசாய முறை, அதன் வெற்றி அவர்களைக் கவர்ந்துள்ளது.

இக் கூற்றுகளுக்குச் சான்ருக இருபத்து ஐந்து வயதுள்ள திரு லலித் ஓபிராய் அவர்களைக் கூறலாம். டில்லி பல்கலைக் கழகத்தில் பயின்று' 1966-ம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இவர். பட்டம் பெற்ற உடனேயே அவர், ருத்ராபூர் என்ற ஊருக்குச் சென்று, கோதுமைப்பயிர் விவசாயத்தில் முனைந்து விட்டார்.

இமாலய அடிவாரத்தில், அவரது கோதுமைப் பயிர் நன்கு செழித்து வளர்ந்து, கண்களுக்கு விருந்தாய் காட்சியளிக்கிறது.

**எதையும் துறக்கத் தயார்**

இன்னொரு இளைஞர்; பெயர் திரு லட்சுமி கன்னு. இவர் லலித் ஓபிராயின் வயல்களையும், செழிப்புற வளர்ந்துள்ள பயிர்களைக்கண்ட பிறகு, இவரும் வேளாண்மையில் ஈடுபட்டுவிட்டார். இவர் ஒரு கல்லூரியில் துணைப் பேராசியராகப் பணியாற்றியவர். அப்பதவியை, வேளாண்மைக்கென உதறித் தள்ளிவிட்டார்.

திரு. லலித் ஓபிராய், 70 எக்கர் நிலத்தில் விவசாயத்தைத் தொடங்கினுர். பிறகு இன்னொரு 200 எக்கருக்கு பண்ணையை விரிவுபடுத்தினுர். பாசன வசதியைத் தாமே ஏற்படுத்திக் கொண்டார். வளர்ச்சி அதிகாரிகளுடன், முறையாக அவ்வப்போது தொடர்புகொண்டு அவர்களது ஆலோசனைகளைக் கேட்டு, விவசாயத்தில் வெற்றி யடைந்துவருகிருர்.

"எது எவ்வாறிருப்பினும், விவசாயத்தில் விதைகள் தாம் மிகவும் முக்கியம்" என்கிருர் ஓபிராய். விவசாயக் கல்லூரியிலுள்ள பொருக்கு விதை நிலையத்திலிருந்து விதைகளைப் பெறுகிருர் இதன் காரணமாக, நெல்லும், கரும்பும், பன்மடங்கு பெருகியுள்ளது. சென்ற ஆண்டுகளை விட, இவ்வாண்டு கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என கூறுகிருர் இவர்.

**ஒட்டு ரக விதைகளே எங்கும்.**

பெரிய, பெரிய பண்ணைகளில், மட்டுமே ஒட்டு ரக விதைகள் பயன்படுத்தப்படுகின்றன என்று கூறுவதற்கில்லை. சிறிய நிலங்களின் உரிமையாளர்கள்கூட ஒட்டு ரக விதைகளையே கையாள்கின்றனர். ரமேஸ்வர்பூர் கிராமத்தில் எவருக்கும் 15 எக்கர் நிலம்கூட கிடையாது; குறைவாகத்தானிருக்கிறது. ஆனுல் அனைவருமே இந்தரக விதைகளையே பெருமளவில் உபயோகிக்கின்றனர். கடந்த 12 திங்கள் காலத்தில், குறைந்தது 20 குழாய்க் கிணறுகள் இவ்வூரில் தோன்றி விட்டன.

1930-ம் ஆண்டில் விவசாயப் பட்டம் பெற்ற திரு மான்சிங், 16 ஆண்டுகள் விவசாயமே செய்து வந்தார். ஆனுல், அவருக்கு அதில்

# வயல்கள் நோக்கி

## வயல்கள் நோக்கி . . .

பெரும் தோல்வியே கிடைத்தது. உடைந்த உள்ளத்தோடு, வேலையைத் தேடி, நகருக்கு புறப்பட்டுவிட்டார் அவர்.

### நாட்டுப்புறத்திற்குத் திரும்பினர், நகருக்குச் சென்றவர்.

பதினறு ஆண்டுகளாக, எவ்வகை பூச்சிகள், அவரது பயிரை நாசமடித்தனவோ, அவற்றை ஒழிக்க ஒரு பூச்சிகொல்லி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிந்த திரு. மான்சிங், வேலையை விட்டு விட்டு கிராமத்திற்கு மீண்டு, வேளாண்மையில் புகுந்தார். சென்ற ஆண்டு நெற் பயிர் செய்தார். இவ்வாண்டு கோதுமைப் பயிர் செய்கிறுர்.

இவர்களெல்லாம், விவசாயத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டி, உழைப்பதற்கு காரணம் என்ன? 'ஒட்டுரக விதைகளே' என்பதுதான் அதற்குரிய தகுந்த பதில்.

### இறைவனும் விஞ்ஞானியாகி விட்டார்

பஞ்சாப் மாநிலத்தில் தான் பொறுக்குரக விதைகளின் முழு வெற்றியையும் காண முடிகிறது. வலிவுமிக்க அவ் விவசாயிகள் "மெக்சிகன் கோதுமை" விதைகளைக் கையாண்டு, உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கி, பயன் அடைந்துள்ளனர். இங்குள்ள 1,700,000 ஏக்கர் நிலங்களில், மெக்சிகன் கோதுமையானது 900,000 ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படுகிறது.

"இப்போதெல்லாம் பஞ்சாப் மாநிலத்தில் நீண்டு உயர்ந்த பயிர்களைக் காணமுடியாது" என்று ஒரு முதியவர் கூறுகிறுர். எல்லாப் பயிர்களும் ஒரு சீராக வளர்ந்துள்ளன. கதிர்களெல்லாம் மொத்தமாகவும், தானியங்களளெல்லாம் கனமாகவும் இருக்கின்றன. உரிய நேரத்தில் பெய்த மழையும் இதற்கொரு காரணம் "என், கடவுள் கூட ஒரு விஞ்ஞானி யாகி விட்டார்" என்று ஒரு விவசாயி கூறுகிறுர்.

" ஜாவோதி " என்ற கிராமத்திலுள்ள உழவர்கள், பிறரது நிலங்களையும் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, கோதுமைப் பயிர் செய்கின்றனர். தங்களது நிலம் மிகவும் சிறியதாக இருப்பதே இதற்கொரு காரணம் என்றுலும், விவசாயத்தில் தற்போது போதிய ஆதாயம் கிடைப்பதே இதன் உள் நோக்கம் எனத் தெரிகிறது.

### விதையைக் கண்டுபிடித்த பெருமகன்

இந்த மெச்சிகன் கோதுமை ரகத்தைக் கண்டு பிடித்து, உழவர்களுக்கு உதவிய அந்த உத்தமர் யார்? அவர்தான் டாக்டர் நார்மன். இ. போர்லாக். இவர்தான் மெச்சிகன் கோதுமை ரகத்தையும், இன்னபிற உயர் ரக விளச்சல் விதைகளையும் கண்டறிந்தவர்.

## நகருக்குச் சென்றவர் கிராமத்திற்குத் திரும்பினர்

"தெராய், ஹாதியாஞ ஆகிய இடங்களில் இந்த ரக கோதுமைப் பயிரைக்கண்டு மகிழ்வுற்றேன். மெக்சிகோவில் 15 ஆண்டுகளில் செய்தனவற்றை, இங்கு 3 ஆண்டுகளில் செய்து விட்டனர்" என்று பெருமையுடன் கூறுகிறுர், டாக்டர் நார்மன் இ. போர்லாக்.

## பட்டம் பெற்றவர்கள் . . .

# சீரிய பணியாற்றும்

# நகராட்சிகள்

அருப்புக்கோட்டை நகரில் 1886-ம் ஆண்டில் 12 நியமன உறுப்பினர்களுடன் ஒரு யூனியன் போர்டு உருவாக்கப்பட்டு அதுவே பின்பு 1931-ல் அருப்புக் கோட்டை பஞ்சாயத்து போர்டு என்று பெயர் மாற்றப் பட்டது. 1948-ல் மூன்றுவது நிலை நகராட்சியாகவும் 1953-ல் இரண்டாவது நிலை நகராட்சியாகவும் உயர்த்தப் பட்டது. 24 வட்டங்களையும் 28 உறுப்பினர்களையும்கொண்டு இயங்கி வரும் இந்நகராட்சி அண்மையில்வரும்நகராட்சிகள் தேர்தலுக்கு பின்பு 28 வட்டங்களும் 32 உறுப்பினர் களும் கொண்டே செயலாற்றிவரும். இந்நகராட்சி 6 சதுர மைல் பரப்பும், 1961-ம் ஆண்டு மக்கள் கணப்பின்படி 50213 மக்கட் தொகையும் கொண்டதாகும். ஏழைக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பெரும் பான்மையினராக உள்ள இந் நகராட்சியின் மொத்த ஆண்டு வருமானம் சுமார் 8 லட்சம் ரூபாய்களாகும்.

## அருப்புக்கோட்டை நகராட்சி

(இராமநாதபுரம் மாவட்டம்)

### இலவச பாட நூல்கள்

அருப்புக்கோட்டை நகராட்சி நகர மக்களுக்கு செய்து வரும் அரும்பணிகள் பலவாகும். சுமார் பன்னிரண்டு மைல் நீளத்திற்கு சிமெண்ட் காங்கிரீட் சாலைகளும் இந்தரை மைல் நீளமுள்ள தார்ச்சாலைகளும், ஆறரை மைல் நீளத்திற்கு கப்பிச் சாலைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

இந்நகராட்சி, 5 தொடக்கப் பள்ளிகளையும், உயர் தொடக்கப்பள்ளி ஒன்றையும், உயர்நிலைப்பள்ளி ஒன்றை யும் நிறுவி மக்களுக்கு கல்விப் பணியாற்றி வருகிறது. ஏழைக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் இலவசமாக சிலேட்டுகளும் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. 1966-67-ம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட 111 மாணவர்களில் 102 பேர் தேர்வு பெற்றனர். இது அனுப்பப்பட்ட மாணவர்களில் 92 சத வீதம் ஆகும். குடிதண்ணீர் தேவைகளுக்காக 6 இடங்களில் ஆழக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீரானது நான்கு டிராக்டர்கள் மூலம் நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 962 மின்விளக்குகளும், 127 டியூப் லைட்டுகளும், 30 மெர்குரி லைட்டுகளும் அமைக்கப்பட்டு இரவு நேரங்களில் நகருக்கு ஒளியூட்டப் படுகிறது. மக்களின் பொழுதுபோக்கிற்காகவும், குழந் தைகள் விளையாடவும் 4 இடங்களில் பூங்காக்கள் அமைக் கப்பட்டு அவைகளில் வானொலி பெட்டிகளும் வைக்கப் பட்டுள்ளது.

### கலவை உரத் தயாரிப்பில் முதல் பரிசு

மக்களுக்கு வைத்திய வசதிகள் அளிப்பதற்காக சித்த மருத்துவ மனை ஒன்றும் மூன்று மகப் பேறு மற்றும் குழந்தைகள் நல இல்லங்களும் நகராட்சியினரால் நடத்தப்பட்டு வருகின்றன. மகப்பேறு மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டு அரசினருக்கு வழங் கப்பட்டுள்ளது. கலவை உரத் தயாரிப்பில் தமிழ கத்திலேயே இந் நகராட்சி முதன்மை பெற்ற அரசினரால் சுழற்கோப்பையும் வழங்கப் பெற்றுள்ளது.

இந் நகராட்சியின் முக்கிய தேவைகளில் ஒன்றான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு அரசினரின் ஒப்பளிப்பு பெற்று அடிக்கல் நாட்டப்பட்டு திட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

துப்புறவுப் பணியாளர்களின் குடியிருப்புக்காக ரூ. 60,000 மதிப்பீட்டில் ஏற்கனவே 20 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 10 வீடுகள் சுட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டுள்ளன.

இந் நகர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாராந்திர சந்தை தினசரி மார்க்கெட் மற்றும் சலவைத் துறை அமைக்க நகராட்சியினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## நெல்லிக்குப்பம் நகராட்சி

**1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் பணியாற்றியுள்ளவை.**

**போக்குவரத்துக்கள் :**

18 சாலைகளின் பராமரிப்புக்காக .. ரூ. 8404·70

மூன்று இடங்களில் மதகுகள் கட்ட ரூ. 1564·65 மார்ச்சு மாதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

**தண்ணீர் வழங்குதல்:**

ரூ. 326·70 செலவில், இரண்டு இடங்களில் உள்ள கைப்பம்புகளின் பிளாட்பாரமும், சோக்பிட் அமைக்கப்பட்டது.

**மூலதன வேலைகள்:**

**போக்குவரத்து :**

அரசால் 1967–68-ம் ஆண்டில் செய்ய அனுமதிக்கப்பட்ட இரண்டு தார் சாலை வேலைகளுக்காக கீழ்க் கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | | ரூ. பை. |
| 1. | கே. எஸ். ஏ. ஆர். ரோட்டில் இருந்து கள்ளச்சேரி வரை தூசு இல்லாத தளமுள்ள தார் சாலை போட | 3,755·75 |
| 2. | முஸ்லீம் கருமார வீதியிலிருந்து வாணுள் வீதி வரை தூசு இல்லாத தளமுள்ள தார் சாலை போட | 3,978·75 |
| | | 7,73,4·50 |


FDSEID 968





நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

எத்தனைகோடி வெற்றி 10-ம் பக்கத் தொடர்ச்சி.

தயாராக இருக்கிறார்கள். அரசாங்கமும். இந்த திட்டத்திற்கு ஆதரவு அளிக்க தயாராக இருக்கிறது. ஆனால் கீழே உள்ள அதிகாரிகள் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள், அந்த பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் ஒன்றாக இணைந்து, கூடி, கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும். எல்லாவற்றையும் எழுதி, தான் மூலமாக அனுப்புகிற காரியத்தைச் செய்தால் அது சில வேலைகளில் மூன்று வருடம், நான்கு வருடங்கள்கூட ஆகும். இதற்கு எல்லாத துறைகளிலும் தொடர்பிருக்கிறது, மின்சாரத் துறையிலே தொடர்பிருக்கிறது. வேளாண்மைத் துறைக்கு இதிலே தொடர்பிருக்கிறது. கல்வித் துறைக்கு இதிலே தொடர்பிருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கும் இதிலே தொடர்பிருக்கிறது. இவ்வளவு பேரும் கலந்து, திட்டத்தை உருவாக்க வேண்டும்,

இந்த ஊரிலே இருக்கக்கூடிய பள்ளித்துணை ஆய்வாளரும், இந்த மாவட்ட கல்வி அலுவலரும் இது பற்றி உடனடியாக கலந்து பேசி, விரைவாக இந்த திட்டத்தைச் செயலாக்கி, அதனுடைய முடிவை எனக்கு அனுப்புவார்களானால், அதைத்தான் நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன். அதற்கு அனைவரும் உறுதுணையாக இருந்து காரியங்களைச் செய்ய வேண்டும். திட்டங்களைக் கொடுப்பது பார்த்து, திட்டங்களைப் பற்றி பயனடைகின்ற பொறுப்பு அதிகாரிகள் கையிலே இருக்கின்றது. அதை அதிகாரிகள் செய்வார்களானால், அதிகாரிகளை இங்கே இருக்கக்கூடிய பெரு மக்கள் தெய்வமாக கருதுவார்கள். இந்த மனப்பக்குவமும், மன விலாசமும். அதிகாரிகளுக்கு அதிகமாக இருக்க வேண்டும். அவர்கள் யார் பெரியவர்கள் என்று போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்காமல் யார் பெரியவர்களாக இருந்தாலும் சரி, காரியம் முடிய வேண்டும் என்கிற அந்த உணர்ச்சியோடு இவைகளை செய்கின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்,

இவைகளை அத்தனையும் சேர்த்துப் பார்க்கின்றபொழுது இடைப்பாடி ஒன்றியத்தில் நல்ல மனநிறைவு அளிக்கத்தக்க வேலைகளைச் செய்கிறீர்கள், மக்களுக்குப் பயனுள்ள வேலைகளைச் செய்கிறார்கள், அந்த வேலைக்கு ஊரிலே உள்ள பிரமுகர்கள் அத்தனைபேரும் ஒத்துழைப்பு தருகிறார்கள் என்று நான் பார்த்துப் பூரிப்பும், பெருமையும் அடைகிறேன். இந்த ஒத்துழைப்பையும் மற்றவைகளையும் மற்ற பகுதியிலே உள்ளவர்களும் பயனடைய தக்க வகைக்கு இடைப்பாடி ஒன்றியம் விளம்பரப் படுத்த வேண்டும், எடுத்துச் சொல்ல வேண்டும் ஆகவே இந்த காரியங்களிலே நீங்கள் மேலும் முயன்று மேலும் பல நன்மைகளைச் செய்துதர வேண்டும், அடுத்த முறை நான் இந்த பகுதியிலே இருக்கின்ற வயல்வெளிகள் நல்ல விளைச்சலைப் பார்த்துப் பூரிக்க வேண்டும், நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; முயன்றால் முடியும். அப்படிப்பட்ட ஆக்க பூர்வமான ஆற்றலை உடையவர்கள் நாம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

## 'கிராமநலம்' சந்தா

கிராமநலம், ஆண்டுச் சந்தா ரூ. 2. ஓராண்டிற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தனி இதழ் விற்பனைக்கு கிடையாது.

'கிராமநலம்' இதழிற்கு பெரும்பான்மையான சந்நாதாரர்களைச் சேர்த்து, கிராமநலம் பணிகள் யாவும் தமிழகத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்குக் கெல்லாம் எட்டி. பரவவேண்டும் என்ற நன்நோக்கத்தில், கிராமவளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளர் திரு. டி.ஏ.எஸ். பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன் வாயிலாக நற்பயன் விளையும் என நம்புகிறோம்.

ஆசிரியர்.

# எலிகளை ஒழிக்க....

**கேள்வி : ஒரு மனிதனுக்கு ஆறு எலிகள் பகை என்று சொல்லப்படுகிறது. இது எவ்வாறு கணக்கிடப் பட்டது?**

பதில் : ஒரு மனிதனின் உணவுத் தேவையின் அளவினதாக, உணவை ஆறு எலிகள் உண்டு வாழ்கின்றன என்பதன் கருத்தில்தான் கூறப்பட்டது.

**கேள்வி : 'ஜிங் பாஸ்பைடு' விஷத்தை உணவில் கலந்து வைத்தாலும், எலிகள் தின்றுவிட்டு இறப்பதில்லை. காரணம் என்ன ?**

பதில் : இந்த விஷத்தை பத்தொன்பது பங்கு உணவிற்கு ஒரு பங்கு வீதம் கலந்து வைத்தால் எலிகள் நிச்சயமாக இறக்கவே செய்யும். விஷம் தின்ற எலிகள் உயிரோடு இருப்பதாகக் கூறுவது தவறு.

**கேள்வி : வயல்களில் நண்டுகளும் பாம்புகளும் இருக்கின்றன. அவற்றால் பயிர்களுக்குக் கெடுதல் ஏற்படும் என்று கருதப்படுகிறது. தங்கள் பதில் என்ன ?**

பதில் : நண்டுகள் பயிர்களின் கதிரை வெட்டுவதால் சேதம் ஏற்படக் கூடும். ஆனால் பாம்புகள் பயிரை நாசம் செய்யும் எலிகளை மட்டுமே கொன்று தின்னும். பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காது.

**கேள்வி : வயல்களில் எலிகள் எந்தக் காலங்களில் வந்து சேருகின்றன ?**

பதில் : எலிகள் பொதுவாக வளமான காலங்களில் தான் அதிகமாகக் குட்டி போடுகின்றன. மேலும், எலி நாலுகால் பிராணி. ஆகையால் எப்பொழுது அவை வயலுக்கு வருகின்றன என்பதை நிர்ணயித்துச் சொல்ல முடியாது. ஆனாலும் வயல் எலிகள் அங்கேயேதான் வளை தோண்டி வாழுகின்றன.

**கேள்வி : வயல்களுக்கு நீர் பாய்ச்சும் போது, எலிவளைகளில் நீர் புகுந்து அவை இறந்து விடும் என உறுப்பினர் கூறு கிறார். தங்கள் கருத்து என்ன ?**

பதில் : வெள்ளெலிகளைத் தவிர, மற்ற எலிகள் எல்லாம் தண்ணீரில் நீந்திச் செல்லும் திறமையுடையன வாகும். எலிவளைகளில் எலிகள் தங்குமிடம், நீர் மட்டத்தைவிட தாழ்வாக அமையாமல், சிறிது உயர மாகவே உள்ள வயல் வரம்புகளில் அமைந்திருப்பதால், எலிகள் நீர் பாய்ச்சுவதால் இறக்க வழியில்லை.

**கேள்வி : வயல்களில் உள்ள வரப்புகளில் எலிகள் குடியிருப்பதைத் தடுக்க என்னென்ன வழி வகைகள் உண்டு ?**

பதில் : பொதுவாக எலிகளைச் சுமார் ஆறு முறைகளால் ஒழித்துக் கட்டலாம் :

(1) ஒரே சமயத்தில் சாகுபடிப் பரப்பில் வரப்புகளை வெட்டி எலிகளைப் பிடித்தல்.

(2) கிட்டி வைத்துப் பிடித்தல்.

(3) விஷம் கலந்த ஆகாரம் வைத்துக் கொல்லு தல்.

(4) விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு பிடித்தல்.

(5) சிறிய வரப்புகள் அமைத்தல்.

(6) எலிகளின் விரோதிகளை அழிக்காமல் இருப்பது போன்ற முறைகளால் எலிகளை அழிக்க இயலும்.

**கேள்வி : பல வகை எலி ஒழிப்பு முறைகளில் எந்த வகையில் எலிகளை ஒழிப்பது சுலபம்?**

பதில் : கதிர் அறுவடை சமயத்தில், வளைகளில், காது கண் திறக்காமலிருக்கும் குட்டிகளுடன், வரப்புகளை வெட்டி தாய் எலியோடு பிடிக்கலாம். மண்ணில் ஈரம் இருப்பதால் வெட்டுவது சுலபம். இம்முறையால் அதிக எலிகளை அழிப்பதோடல்லாமல், அதன் இனப்பெருக்கத் தையும் தடுக்க முடிகிறது. வயல்களில் உள்ள எலிகளை இனப்பெருக்கக் காலமாகிய அக்டோபர், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வரப்புகளை வெட்டிப் பிடிக்கலாம்.

**கேள்வி : புல்எலி, கரம்பு எலி, சுண்டெலி, என எவ்வாறு உருவத்தைக் கொண்டு வித்தியாசம் தெரிந்து கொள்வது ?**

பதில் : உருவத்தைக் கொண்டு எலிகளை ஒருவாறு கண்டுபிடிக்க முடியும். கரம்பெலி எல்லா எலிகளை விடப் பெரியது ஆகும். புல்லெலியின் வயிற்றின் அடிப் பாகம் சிறிது வெண்மை நிறத்துடன் இருக்கும்.

## கேள்வியும் - பதிலும்

# கருத்தைக் கவர்ந்த கழுகுமலை

**ச**முதாய நலத்திட்டங்களின் வாயிலாக, அரசு ஒத்துழைப்போடும், சுய முயற்சியாலும், கிராமங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டுள்ளன என்பது கண்கூடான உண்மையாகும். இவ்வகையில் தமிழகத்தின் தலை சிறந்த கிராமமாக, கழுகுமலை பேரூராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழக அரசினரால் ரூ. 1,000 முதல் பரிசு பெறும் அரிய சிறப்பினைப் பெற்றுள்ளது.

வீரம் செறிந்த திருநெல்வேலி மாவட்டத்தில், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் கழுகுமலை அமைந்துள்ளது.

கழுகுமலை என்ற பெயருக்கே காரணமாக அமைந்துள்ள மலையின் உயரம் 300 அடிகளாகும்.

இது திருச்சி மலைக்கோட்டையை விட சற்று உயரமானது. இம்மலையின் உச்சியில் பிள்ளையார் கோவிலும் அக்கோவிலுக்குச் செல்லும் வழியில் புத்தர் சிலையும் சமண விக்கிரகங்களும் உள்ளன. சிவன் கோவில் ஒன்று மலையை மேலிருந்து கீழாகக் குடைந்து வெட்டப்பட்டிருப்பதால் வெட்டுவான் கோவில் என்று, காரணப் பெயருடன் அழைக்கப்படுகிறது.

பல்லவ அரசு தமிழகத்தில் புகழோடு அரசோச்சிய காலத்தில், சமணர் இங்கு கழுவேற்றப் பட்டதால், இவ்வூர் கழுகுமலை என பெயர் பெற்றதாகக் கூறுவர். ஒவ்வொரு ஆண்டிலும், கழுவேற்றும் திருவிழா, பங்குனி உத்திரம் ஆறும் திருவிழாவின்போதும், தைப்பூசம் ஆறும் திருவிழாவின்போதும் இரவில் நடைபெறுகிறது.

பாரம்பரியமாகவே கழுகுமலை பாடல் பெற்ற தலமாகும். மலையடிவாரத்தில் தமிழ் கடவுளாகிய முருகபெருமான் கோவில் கொண்டுள்ளார்.

கழுகுமலையில் இந்து, முஸ்லீம், கிருஸ்த்துவர் ஆகிய சமுதாயத்தினர் ஒருமைப்பாடு உணர்வுடன் ஊர் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவுகின்றனர். "ஒன்றுபட்ட உழைப்பே உயர்வுக்கான ஒரே வழி" என்ற அடிப்படை உணர்வே—இன்று தமிழகத்தின் தலைசிறந்த கிராமமாகத் திகழும் வாய்ப்பினைக் கொடுத்துள்ளது.

7,408 மக்கள் தொகையைக் கொண்ட இவ்வூரில் 350 குடும்பத்தினர் உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். பெரும்பாலும் புன்செய் பயிர்களே விளைவிக்கப்படுகின்றன. இங்குள்ள 30 பாசனக் கிணறுகளில் 21 மின் இறவை வசதியைப் பெற்றுள்ளன. அரசினரால் சிபாரிசு செய்யப்படும் திருந்திய விவசாய முறைகளும், பொறுக்கு விதைகளும், கையாளப்படுகின்றன.

**கால்நடை - வளர்ச்சிக்காக**

கால் நடை வளர்ச்சிக்காக இங்கு அரசினரால் கிராம கால்நடை கேந்திரம் ஒன்று இயங்கி வருகிறது. சென்ற ஆண்டில் 1,444 எருமைகளுக்கும் 953 பசுக்களுக்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்பட்டுள்ளன. கால் நடைச் செல்வத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அம்மக்களின் ஆர்வத்தைச் இது சுட்டிக்காட்டுகிறது.

கழுகுமலையில் உள்ள மாட்டுத் தாவணி தமிழகமெங்கும் புகழ் பெற்றது: 100 ஏக்கர் பரப்புள்ள இச்சந்தையில் ஆண்டுதோறும், தை பங்குனி மாதங்களில் 24,000 கால்

[30-ம் பக்கம் பார்க்க.]

படங்கள் : எதிர்ப் பக்கம்







### தமிழகத்தின் சிறந்த கிராமம்
### 'பரிசு பெற்ற கழுகுமலை'

படம் 1. தமிழகத்தின் சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட கழுகுமலை கிராமம் கழுகாசல மூர்த்தி ஆலயத்தின் திருக்குளம்.

படம் 2. கழுகுமலை கிராமத்தின் ஊர் பொதுத் தோற்றம்.

(கழுகுமலை பேரூராட்சி மன்ற உறுப்பினர்களை மூன்றாவது அட்டையில் காண்க.)



# நட்புறவுப் பயணம்





சோவியத்
மாநகராட்சித்
தலைவர்கள்
சென்னை
வந்தபோது

உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில்
சென்னை மாநகராட்சி தூதுக்குழுவினர்
சோவியத் நாடுமுதலான அயல் நாடுகளுக்குப்
புறப்பட்ட நாளில்.... (௨-7-68)













## படத் தொகுப்பு விளக்கம்

(1) வருவாய்த்துறை வாரியத்தின் புதிய கட்டிடமான எழிலகத்தை, சென்னையில் 4-7-68 அன்று மாண்புமிகு முதலமைச்சர் திறந்து வைத்தார்,

(2) எழிலகத்தின் தோற்றம்.

(3) காஞ்சியில் 6-7-68 அன்று, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டிடத்திற்கு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

(4) காஞ்சிபுரத்தில் கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் மாதிரி தோற்றம்.

(5) செங்கல்பட்டு மாவட்ட தலைநகர் மாற்றத்தை ஒட்டி காஞ்சியில் நடைபெற்ற கிராம பொருட்காட்சியில் கால்நடைகளைப் பார்வையிடுகிறார் மாண்புமிகு முதலமைச்சர்.

(6) மொரிஷியஸ் தீவுக்குச் சென்றிருந்த பொழுது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, அந்நாட்டு தலைமையமைச்சர் திரு ராம்கூலம் (Ramgoolam) அவர்களுக்கு திருக்குறள் நூலை பரிசளித்தார்.

# ஊர்ப்பணிக்கு ஓர் அணி



**ஒரு** புதிய கால்வாய் பாய்ந்தோடுகிறது. அதற்கு மேல் உள்ள பாலத்திலிருந்து பார்த்தால் சுற்றுப்புறங்களில் எல்லாமே தெரிகிறது. இடது பக்கம் நிலம் உயர்ந்து உயர்ந்து ஒரு சிறிய சிவப்பு குன்றில் போய்ச் சேருகிறது. அதன் அடிவாரத்தில் ராமதண்டலம் ஏரி. வலது பக்கம் வயல்களுக்கு அப்பால் கிட்டத்தட்ட 350 ஏக்கா ஆயக்கட்டு பகுதியைக் கொண்ட மற்றொரு ஏரி. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒத்திக்காடு கிராமத்தைத்தான் பார்க்கிறோம்.

இந்த புதிய கால்வாய் உயர்ந்த நிலப்பகுதியையும், மேல் ஏரியையும் வயல்கள் வழியாக பாசன ஏரியுடன் இணைக்கிறது. இதன் நீளம் 1,700 அடி.

### இதற்கு என்ன சிறப்பு

கீழ் ஏரியில் உள்ள தண்ணீர் பாசனத்திற்குப் போதாது. விவசாயிகள் இதுவரை மிகவும் சிரமத்துக்குள்ளாகி வந்தார்கள். ஜூலை மாதத்தில் ஏதோ மழை பெய்கிறது. ஆனால் கொளுத்தும் வெயிலினால் காய்ந்து கிடக்கும் நிலத்துக்கு இந்த மழையின் நினைவு கூட பசுமையாக இல்லை. டிசம்பர் மாதத்தில் பெய்யும் மழைதான் சாகுபடிக்கு உதவுகிறது. இப்போது இந்தக் கால்வாயில் தண்ணீரே இல்லை. கீழ் ஏரியில் சேறு படிந்து கிடக்கிறது. ஆனால் டிசம்பர் வந்து விட்டால் இந்த நிலப்பரப்பு முழுவதும் ஒரு வடிகால் பகுதியாக மாறிவிடும். அப்போது இந்தப் பாசன ஏரியில் தண்ணீர் நிறைந்திருக்கும்.

இந்தியாவில் இத்தகைய கால்வாய்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். பிறகு இந்த ஒரு கால்வாயை மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும்? இதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது. நாடெங்கிலும் சேனைகள் வளர்ந்து வருகிறதே என்று மக்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு புதுரக சேனை செய்துவரும் செயலான அலுவல்களுக்கு இந்தக் கால்வாய் ஒரு சான்று ஆதலால்தான் இந்தக் கால்வாய்க்கு மட்டும் அதிக முக்கியத்துவம்.

### சீரணியின் நோக்கம்

சீரணி என்றாலே சுபிட்சத்துக்கான படை என்றுதான் பொருள். 1967 ஜூன் 17-ஆம் தேதி தமிழக முதலமைச்சர் மாநில சட்ட சபையில் சீரணி அமைப்பையும் இதன் நோக்கங்களையும் அறிவித்தார். அப்போது அவர் சொன்னார், “அரசு வகுக்கும் திட்டங்களும், அவற்றை நிறைவேற்றுவதில் நிர்வாகத் துறையினர் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் இருந்தால் நாட்டில் ஒரு புதிய சமூக விழிப்புணர்வை உருவாக்கி விட முடியாது. நாம் ஓர் உணர்ச்சி வேகத்தைத் தூண்டி விட வேண்டும். இந்த உணர்ச்சி வேகம் சமூகத்தை தட்டி எழுப்ப வேண்டும். ஒரு புதிய சமூக முறையை உருவாக்குவதில் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கும் வகையில் இது தூண்டிவிடப்பட வேண்டும். நமது மக்களுள் சில ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுக்காகவும், தங்கள் குடும்பங்களுக்காகவும் இயன்றதைச் செய்த பிறகு ஒரு நாளைக்கு ஒரு மணி நேர உழைப்பையாவது நாட்டின் பொது நலனுக்காக வழங்கினால் நமது சமூகத்தின் முன்னேற்றம் உறுதியாகி விடும். ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு கருதுகிறார்கள் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் முதல் நடவடிக்கையாக சீரணிப் படைகளை அமைக்க தீர்மானித்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்தப் படையின் உறுப்பினர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து ஊதியம் கிடைக்காது. ஆனால் வேண்டிய கருவிகளும் இயந்திர சாதனங்களும் கிடைக்கும். குளங்களைப் பழுது பார்ப்பது, சாலைகளை மேலும் சீராக்குவது, தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்ததாய் மாற்றுவது, முதியோருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற அலுவல்களில் இவர்கள் ஓய்வு நேரத்தில் ஈடுபடுவார்கள். அந்தந்த இலாகாக்களின் தொழில்நுட்பச் சிப்பந்திகள் சீரணிப் படையினருக்கு வழிகாட்டி உதவுவார்கள்”.

ஒத்திக்காடு கால்வாய் திட்டத்தையும், அதே தொகுதியில் இதுபோன்ற மேலும் இரண்டு திட்டங்களையும் மக்கள் தாங்களே முன் வந்து செய்து முடித்திருக்கிறார்கள். விளைபொருள் உற்பத்திக்குத்தான் இந்த திட்டத்தில் முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், கிராமங்களில் மற்ற வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். இதே தொகுதியில் உள்ள பெரத்தூர் கிராமத்தில் ஒரு ஹரிஜனக் குடியிருப்பில் 2,000 அடி நீளத்துக்கு சாலைகள் அமைத்திருக்கிறார்கள். ஜலதாரைக் கால்வாய்களையும் அமைத்திருக்கிறார்கள். பக்கத்தில் உள்ள சோழவரம் தொகுதியில் கிராம வாசிகள் தங்கள் குழந்தைகளுக்காக புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான தீவிரத் திட்டம் ஒன்றில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தத் தொகுதியில் இத்தகைய 23 புதிய கட்டிடங்கள் இவற்றுக்கான பொருள்களை அரசே வழங்கிற்று; உழைப்பை மக்கள் வழங்கினர்.

சாகுபடியாளர்களுக்கு முற்போக்கு சிந்தனையும், உழைக்கும் மனப்போக்கும் இருந்தால் எந்த அளவுக்கு மாறுதல் ஏற்படுத்த முடியும் என்பதற்கு இந்தப் பகுதி ஓர் எடுத்துக்காட்டாகும். மழை இல்லை என்பது உண்மை; ஆனால் பம்ப்செட்டுகளினால் பாசன வசதி ஏற்படுத்தி மழையின்மையினால் ஏற்படும் இன்னல்களைத் தீர்த்து விட்டார்கள். இந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லாத ஒரு கிராமம் கூட கிடையாது. இந்தப் பகுதியில் சாகுபடிக்கு உகந்த நெல் வகைகளைத் தெரிந்தெடுத்து வழங்கியிருக்கிறது பக்கத்திலுள்ள திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையம்" அரசாங்க விதைப் பண்ணையொன்று நல்ல தரமான விதைகளை வழங்குகிறது. சோளத்தையும் கரும்பையும் இப்போது புதிதாய் சாகுபடி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

விளைபொருள் உற்பத்திப் பெருக்கத்துக்கு வேண்டிய வசதிகளை கிராம வாசிகளுக்கு வழங்குவதற்காக **ஊராட்சி நிறுவனங்கள்** தங்கள் வசமுள்ள நிதியை முழுமையாய் பயன்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு மாநிலமெங்கிலும் நிறைவேற்றப்படும் ஓராண்டு திட்டத்தை இந்தத் தொகுதியும் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக ட்ராக்டர்களையும், மற்ற கருவிகளையும் வாங்குகிறார்கள். பம்ப்செட்டுகளை அமைக்கிறார்கள்.

### 28,000 தொண்டர்கள்

சீரணிப்படை மிகச் சிறப்பாக பணிபுரிகிறது என்று மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. கருவிகளுக்கும் யந்திர சாதனங்களுக்குமாக 1967–68-ஆம் ஆண்டில்—அதாவது சீரணிப்படையின் முதல் ஆண்டில்—அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியது. இந்தத் தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டது. சுமார் 28,000 தொண்டர்கள் கிட்டத்தட்ட 17½ லட்சம் ரூபாய் மதிப்புக்கு இலவசமாக உழைத்திருக்கிறார்கள். ஏரிகளை புதுப்பித்திருக்கிறார்கள். வண்டல் மண்ணை அகற்றியிருக்கிறார்கள், பாசனக் கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள், தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்ததாய் மாற்றியிருக்கிறார்கள்.

சீரணிப்படையின் அலுவல்களை திரு ஜயப்பிரகாஷ் நாராயண் புகழ்ந்து உரைத்திருக்கிறார். "இந்த முயற்சிக்கு காந்திஜீ முழு மனதுடன் ஆசி கூறியிருப்பார். நாட்டின் வருங்காலம், அதன் சுபிட்சமும் சமாதானமும், மக்கள் செய்யும் இதுபோன்ற அலுவல்களைத்தான் நம்பியிருக்கிறது" என்று அவர் கூறுகிறார்.

## பிற மாநிலங்களில்

### கடனில்லா கிராமங்கள்

மகாராஷ்டிரா மாநிலத்தின் அவுரங்காபாத் மாவட்டத்திலுள்ள 12 கிராமங்கள் "கடனில்லா கிராமங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

இக்கிராமவாசிகளிடமிருந்து தக்காவிக் கடன் நிலுவையாக ரூ. 10,000 வசூலிக்கப்பட்டுள்ளது. தேசியப் பாதுகாப்புப் பத்திரத்தில் ரூ. 10,000 அஞ்சலக சேமிப்பு வங்கியில் ரூ. 40,000 இக்கிராமவாசிகள் செலுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்கு பெற்றுள்ளனர்.

### வரிப்பாக்கியே இல்லாத ஊராட்சிகள்

கிழக்கு கோதாவரி மாவட்டத் (ஆந்திர மாநிலம்) திலுள்ள, ராயாவரம் ஊராட்சி சமிதியிலுள்ள 46 ஊராட்சிகள் அனைத்திலும் வரிப்பாக்கியே இல்லை. வரிகள் அனைத்தையும் அவர்கள் பாக்கி ஏதுமின்றி செலுத்தி விட்டனர். நடப்பாண்டில், இவ்வரியச் செயலைப் புரிந்த சமிதியாக ராயாவரம் சமிதி அழைக்கப்படுகின்றது.

அண்மையில் தொடங்கப்பெற்ற புதிய பகுதி—மகளிர் குழந்தைகள் பகுதி. இந்த இதழில் தஞ்சை மாவட்டத்திலுள்ள கொரடாச்சேரி வட்டாரத்திலுள்ள மகளிர் மன்றங்கள் ஆற்றிவரும் அரும்பணிகள் பற்றிய சுருக்கமாக கட்டுரையை வெளியிடுகிறோம்.

# மகளிர் - குழந்தைகள் பகுதி

## கொரடாச்சேரி ஒன்றியத்தில்

## மகளிர் மன்றங்கள் பணி

தஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி வட்டாரத்திலுள்ள 44 ஊராட்சி மன்றங்களிலும் 44 மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஒரு மன்றத்தில் சராசரி 20 உறுப்பினர் வீதம் உள்ளனர். இவற்றை மன்ற அமைப்பாளர்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ. 15 உதவித் தொகை வழங்கப் படுகிறது. இவர்களுக்கு முக்கிய சேவிகாக்கள், கிராம சேவிகா ஆகியோர் பணியின் விவரங்களை சொல்லித்தருகின்றனர். இது தவிர, 3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டாரத்தில் ''அமைப்பாளர் கூட்டம்'' நடத்தப்படுகிறது. இதில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையர் மாவட்ட மாதர் நல அதிகாரி, மற்றும் சமூக நலக் குழுவின் உறுப்பினர் முதலானோர் கலந்து கொண்டு மகளிர் மன்றத்தில் செய்யக்கூடிய, செய்யவேண்டிய வேலை விவரங்கள் பற்றி முடிவு எடுக்கிறார்கள்.

இவற்றில் 36 மன்றங்களுக்கு தையல் கைத் தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு கதர், கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தையல் இயந்திரங்கள் ஆகும்.

நான்கு தையல் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு மகளிர் மன்றங்களில் தையல் வேலை கற்றுத் தருகின்றனர்.

மகளிர் மன்றங்களில், தையல் மற்ற கைவேலைகளை கற்றுக்கொடுப்பதுடன் குடும்பத்திற்கு உதவக்கூடிய விவரங்களாக உணவை சத்து கெடாமல் பக்குவம் செய்வது பற்றியும், உணவு சேமிப்பு வகை பற்றியும் கலப்பு உணவு, உயிர் சத்துக்கள் இவற்றின் அவசியம் பற்றியும், அவ்வப்போது எடுத்துச் சொல்லி, செயல் முறைகளும் செய்து காட்டப்படுகின்றன. சிக்கனம் சேமிப்பு, குடும்ப நிர்வாகம், குடும்ப வரவு, செலவுத் திட்டம் இவை போதிக்கப்படுகிறது. வீட்டுத் தோட்டம்

பாடுவதாலும், கோழி வளர்ப்பதாலும் அன்றாட தேவைகளை வீட்டிலேயே தயார் செய்து கொள்வதாலும் சேமிக்கும் பணத்தை, வளரும் சேமிப்புக் கணக்கில் போட உதவி செய்யப்படுகிறது. இதுவரை 682 பெண்களுக்கு அஞ்சலக சேமிப்புக் கணக்கும் ஆரம்பித்து தரப்பட்டுள்ளது.

**ஆண்டுதோறும் குழந்தைக் காட்சிகள்**

குடும்பக் கட்டுப்பாடு முறையில் கருத்தடை சாதனங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பெண்களின் மன மகிழ்வுக்காகவும், பொழுது போக்கிற்காகவும், கலை, கலாச்சாரம் சம்பந்தமாக பாட்டு, பக்திப்பாடல், கும்மி, பஜனை போன்றவை வாரத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. சிறு பொழுதுபோக்கு விளையாட்டுகளும் அவ்வப் பொழுது நடக்கும். ஒவ்வொரு தாய், சேய் நல விடுதியிலும் ஒவ்வொரு ஆண்டும் குழந்தை காட்சிகள் நடத்தப்படுகின்றது. இதில் குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுகாதாரம் குடும்பநலத் திட்டம் விளக்கப்படுகிறது. மற்றும் தேசிய விழாக்களும், பெரியோர்கள் பிறந்ததின விழாக்களும், மத சம்பந்தமான விழாக்களும் மகளிர் மன்றங்களில் நல்ல முறையில் கொண்டாடப்படுகிறது. அதுசமயம், அந்தந்த நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தமான சொற்பொழிவுகள் நடக்கும்.

சமூகக் கல்விக்கான நூல்கள், ஒரு மன்றத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 10-க்கு வாங்கி வழங்கப்படுகின்றன. சமூகத்தில் பழகும் விதம், பொது இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறை, பொது சுகாதாரம் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. இந்திய அரசியல் அமைப்பில் அத்தியாவசியமான சில சட்ட திட்டங்கள், தீண்டாமை, வாக்குரிமை வாக்கை பயன்படுத்தும் முறை, அரசு கொள்கைகள், அவ்வப்போது அரசு பிறப்பிக்கும் ஆணைகள் இவற்றை கிராமிய பெண்களிடையே எடுத்துச் சொல்லி அவர்களை விவரம் தெரிந்த பெண்களாகின்ற நிலை உருவாக்கப்படுகிறது. இவை பொதுவாக மகளிர் மன்றங்களிலும், பெண் பயிற்சி முகாமிலும் விளக்கப்படுகிறது.

வாழ்வில் வசதி குறைந்தவர்களுக்கு பல விதங்களிலும் மகளிர் மன்றம் உதவி செய்து வருகிறது. தையல் தேர்வு பெற்ற பெண்களில் 4 பேர் தையல் ஆசிரியையாகவும், 2 பேர் பள்ளியில் பகுதி நேர தொழில் ஆசிரியைகளாகவும், 3 பேர் பால சேவிகைகளாகவும் வட்டாரத்தின் உதவியால் பணியில் சேர்த்துள்ளனர். இரண்டு பெண்களுக்கு தாய் சேய் நல விடுதியில் ஆயா வேலை வாங்கித் தரப்பட்டுள்ளது. மூன்று கைம் பெண்கள், அரசினரின் சேவை இல்லத்தில் சேர்ந்து படித்துவிட்டு தற்போது பள்ளி ஆசிரியையாகவும், செவிலித் தாயாகவும் பணியாற்றுகின்றனர். மற்றும் இருவர் தற்போது தஞ்சை சேவை இல்லத்திலும் திருச்சி சேவா சங்கத்திலும், படித்து வருகின்றனர். கல்வியற்ற ஏழைப்பெண்கள் இருவர் தஞ்சையில் தனவந்தர் வீட்டில் சமையல் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். மூன்று பெண்கள் தாம்பரம் சேவை இல்லத்தில் தற்போது தையல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சமூக நல ஆயம் வழங்கும் மானியம் ஆண்டிற்கு ரூ. 750 பெற்று குளிக்கரையில் ஒரு குழந்தைகள் காப்பகம் நடைபெற்று வருகிறது. இதற்கு குளிக்கரை ஊராட்சியினரும் ஆண்டிற்கு ரூ. 500 நன்கொடை தருகின்றனர்.

**அமைப்பாளரின் அரும்பணி..**

அம்மையப்பன் என்ற ஊரில் ரூ. 3,300 மதிப்பீட்டில் 50 சதம் மக்கள் பங்குத் தொகை கட்டி, ஒரு மாதர் சங்க கட்டிடம் கட்டி முடித்து அதில் மகளிர் மன்றம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாரில் ஒரு மகளிர் வானொலி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு ரூ. 420-க்கு ஒரு வானொலிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. மக்கள் அதில் ரூ. 300 பங்குத் தொகையாக கட்டியுள்ளனர். மகளிர் மன்றங்களின் அமைப்பாளர் திருமதி திரபுரசுந்தரி அம்மாள் தலைமையில் நல்ல முறையில் நிகழ்ச்சிகள் கேட்கப்படுகிறது. பின்பு கேட்ட செய்திகள் பற்றி பட்டிமன்றமும் நடத்தப்படுகிறது. வட்டாரத்திலுள்ள 44 அமைப்பாளர்களில் இவர் தனிச் சிறப்புடன் பணியாற்றுகிறார்.

அத்திக்கடையில் முஸ்லீம் மகளிர் மன்றமும், எலவங்குடியில் அரிசன மகளிர் மன்றமும் எல்லாபணிகளிலும் பங்குபெற்று சிறந்த முறையில் பணியாற்றுகின்றன.

*Manufacturers of :*

1. Paper cutting machine
2. Paper punching machine
3. Tobacco cutting machine
4. Hand pumps
5. Brass cylinders for hand pumps
6. All machineries for hand made match industries
7. Tin rollers for textile mills
8. Cast iron parts for cement factories, spinning mills, Textiles, Litho and offset machine parts and other parts as per parties' specifications

## THE KAKA INDIAN FOUNDRY

THIRUTHANGAL P.O.

(Via) SIVAKASI, RAMANATHAPURAM DISTRICT

# தச்சுத் தொழில் உற்பத்தி நிலையம்

## கயத்தாறு

கயத்தாறு அஞ்சல் திருநெல்வேலி மாவட்டம்

கயத்தாறு ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் இயங்கும் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையத்தில் குறைந்த விலையில், உயர்ந்த ரக மரங்களைக் கொண்டு குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகளுக்கும், பள்ளிகளுக்கும், வீட்டுத் தேவைகளுக்கும், மற்றும் பல்வேறு அரசாங்க அலுவலகங்களுக்கும் தேவையான எல்லாவித மரச் சாமான்களும் வேண்டுகோளின் பேரில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு :

**உயர்ந்த ரக வண்டிகள் செய்வதற்கு தமிழகத்திலேயே சிறந்த இடம் கயத்தாறு.**

விபரங்களுக்குக் கயத்தாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகுக.

**எஸ். ஜெபராஜ்,**
*தொழில் வளர்ச்சி அலுவலர்.*

**ச. த. ஜெயபாலன், பி.எ.,**
*ஆணையாளர்,*

**எஸ். கோதண்டராமுத் தேவர்,**
*பெருந்தலைவர்.*

நடைகள் விற்பனையாகின்றன. இச் சந்தையின் சுகாதார நலனுக்காக ஆண்டிற்கு ரூ. 5,000 வரை செலவழிக்கப்படுகிறது, இச்சந்தை ஆண்டிற்கு ரூ. 36,000-க்கு குத்தகைக்கு விடப்படுகிறது.

**கூட்டுறவே வீட்டுயர்வு**

தனக்கென வாழாது பிறருக்கென வாழும் பண்பாடே வளமான வாழ்வுக்கு வழியமைக்கும் என்பதை உணர்ந்த கழுகுமலை வாழ் மக்கள் கூட்டுறவுத் துறையிலும் முன்னணியில் உள்ளனர். 509 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுறவுப் பண்டகசாலையும், இரு கூட்டுறவு நாணயச் சங்கங்களும்—ஆண்டு தோறும் லாபம் பெறும் அளவுக்குச் சிறப்புற இயங்குகின்றன.

**தொழில் வளம் சிறக்க....**

தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலின் காரணமாகத் தமிழகத்தின் ஸ்வீடன் என்றே கழுகுமலை அழைக்கப்படுகிறது. இங்கு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் லாபகரமாக இயங்குகின்றன. உற்பத்தி வரியாக அரசினருக்கு, ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் செலுத்தப்படுகிறது. பருத்தி அரைக்கும் தொழில், எண்ணெய்த் தொழில், பனைத் தொழில் ஆகியவை இங்குச் செழிப்புற்று வளர்கின்றன. இங்குள்ள பனை பொருள் கூட்டுறவு விற்பனை நிலையத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 1,27,635 பெறுமானமுள்ள பனை பொருட்கள் விற்பனையாகின்றன. கல்வேலைத் தொழிலும் இங்குச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. 46 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய கல்வேலைத் தொழிலாளர் சங்கம் அரசினரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு உயர் நிலைப்பள்ளி ஒன்றும், ஆரம்பப்பள்ளி ஒன்றும், உயர் ஆரம்பப் பள்ளிகள் இரண்டும் இயங்கி வருகின்றன. 58 ஆசிரியர்களிடம் 1,684 மாணவர்கள் பயின்று, 90 சத விகிதத்திற்குக் குறையாமல் தேர்ச்சி பெறுகின்றனர். 235 ஏழை மாணவர்களுக்கு முறையாக மதிய உணவு அளிக்கப்படுகிறது.

**நோயற்ற வாழ்வு**

இங்கு ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை செயல்பட்டு வருகின்றது ஊராட்சி ஒன்றியம்ஆண்டொன்றுக்கு இம்மருத்துவ மனையை நடத்த ரூ. 16,000 செலவிடுகின்றது. நாளொன்றுக்கு 150 நோயுற்றோர் இம் மருத்துவ மனையால்பயனடைகின்றனர். சுகாதார வசதிகள் காரணமாய் இறப்பு விகிதம் 1,000-க்கு 16 ஆக குறைந்துள்ளது. குடும்ப நலத்திட்டத்தைச் செயல் படுத்துவதிலும் கழுகு மலைக்குத் தனியிடம் உண்டு. பிறப்பு விகிதமும் 1,000-க்கு 32 ஆக தற்போது குறைந்து வருகிறது.

**சாலை—குடிநீர் வசதிகள்**

பேரூராட்சி பராமரிப்பின் கீழ் 1¼ மைல் நீளமுள்ள சிமெண்ட் சாலையும், கல்பரப்பிய சாலை 2மைல் நீளமும், மண்சாலை 3 மைல் நீளமும் உள்ளன. மனித சக்தி திட்டமும் இங்குச் செயல்படுகிறது. குடிநீர் வசதிக்காக 19 குழாய்க் கிணறுகளும், ஒரு தெப்பமும், 10 குடி நீர் கிணறுகளும், இரு மேல் நிலை குடிநீர்த் தொட்டிகளும் பயன்படுகின்றன. இதில் ஒன்று ரூ. 10,000 செலவில் மக்களின் முழுப்பங்குத் தொகையுடன் உருவானதென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**சிறுசேமிப்பு**

கழுகுமலை மக்கள் சிறு சேமிப்பிலும் ஈடுபாடு உள்ளவர்கள். இங்கு 297 சேமிப்புக் கணக்குகளில் ரூ. 28,000-ம் 99 வளரும் மாத சேமிப்புக் கணக்குகளில் ரூ. 7,040-ம் ரூ. 3,900 தேசீய பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

95 சத விகிதம் வழக்குகளை வெற்றிகரமாக முடித்தமைக்கு 1967-ம் ஆண்டில் கழுகுமலை காவல் நிலையமும், மாவட்ட அளவில் முதல் பரிசைப் பெற்றுள்ளது.

**அண்ணலின் அடிச்சுவட்டில்....**

அம்பர் ராட்டை இங்குள்ள ராட்டை உற்பத்தி நிலையத்தில்இருந்து நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆண்டு தோறும் 85,450 சிட்ட அளவில் கதர் நூல் உற்பத்தியாகிறது.

அரிசன மாணவர்களுக்கு விடுதி ஒன்று அரசினரால் ஆரம்பிக்கப்பட்டு, 50 மாணவர்கள் பயன் பெறுகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு நிலம் ஒதுக்கப்பட்டு, அவர்களே தங்கள் கைப் பொருள் கொண்டு 13 குடியிருப்புகளை ரூ. 13,000 செலவில் அமைத்துள்ளனர்.

**திருமணம் செய்ய வசதி**

குறைந்த செலவில் திருமணம் நடத்துதவற்கு வசதியான ஐந்து திருமண மண்டபங்கள் உள்ளன.

**சீரணியின் சிறப்பான பணி**

கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் 50 பேர்களைக் கொண்ட சீரணிப் படையில், கழுகுமலைத் தொண்டர்கள் 13 பேர் உள்ளனர் சீரணி வீரர்கள் சாலை அமைப்பு, பள்ளிகளுக்கு வெள்ளையடிப்பு ஆகிய பயனுள்ள வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

கழுகுமலை பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ. 66,000 ஆகும். ஆண்டு தோறும் சகல வரிகளையும், நிலுவை எதுவுமின்றி, எவ்வித நிர்பந்த நடவடிக்கையின்றி, வசூலிக்கப்படுகிறது என்பது போற்றத் தக்கதோடு, பின்பற்ற வேண்டியதுமாகும். பேரூராட்சியின் தலைவரான திரு என். எஸ். ராமசாமி நாயக்கர் மக்கள் தொண்டே பெரிதெனக் கொண்டு பணியாற்றும் பண்பாளர்.

**வழிகாட்டும் பேரூராட்சியின்நிர்வாகம்**

ஒன்றுபட்ட உழைப்பே உயர்வளிக்கும் என்ற குறிக்கோளுடன் அயராது பாடுபட்டு, தமிழகத்தில் முதன்மைபெற்ற கழுகுமலை, மற்றையோருக் கெல்லாம் நல்லதொரு வழி காட்டியாகத் திகழ்கிறது.

பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டு முதல் பரிசு பெற்ற கழுகுமலை பேரூராட்சி, ஆக்க வேலைகளில் முனைந்து நின்று மேலும் பல வெற்றிகளைக் காண வாழ்த்துவதோடு, அதன் சிறப்பியல்புகளை நாடறியச் செய்வதில் **கிராமநலம்** பெருமிதம் கொள்கிறது.

# புதியதோர் உலகு செய்வோம்

### மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம்

(மதுரை மாவட்டம்).

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம் மூலம் மே 1968-ல் நடைபெற்ற வேலைகள் விவரம் வருமாறு :

சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 40,482·00 வசூல் செய்யப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை 25 பேர்களுக்கு செய்யப்பட்டுள்ளது.

1. ஒரக்காடு, 2. பூதூர், 3. மாபுஸ்தான்பேட்டை காலனி, 4. திருநிலை, 5. விச்சூர், 3 கட்டிடங்கள், 6. ஜனப்பன்சத்திரம், 7. பஞ்செட்டி, 2 கட்டிடங்கள், 8. வடக்கநல்லூர், 9. சின்னம்பேடுபேட்டை.

ஒன்றியத்திலிருந்து சுண்ணாம்பு மட்டும் அளிக்கப்பட்டது. வெள்ளை அடித்தல், துப்புரவு செய்தல் முதலிய எல்லா வேலைகளையும் சீரணித் தொண்டர்களே செய்து முடித்தனர். தொண்டர்கள் செய்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 450 ஆகும்.

### கிள்ளியூர்

கால்நடைத் திட்டத்தின் கீழ் 623 கால் நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

### அகஸ்தீஸ்வரம்

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய எல்லையில் 58 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஒன்றியத்தின் கீழ் செயல்படுகிற கொல்லு தச்சுக் கூடத்தில், தச்சு பிரிவில் ரூ. 1,267 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகியுள்ளன. ரூ. 2,645 மதிப்புள்ள பொருள்கள் விற்பனையுமாகியுள்ளன. கொல்லுப் பிரிவில் ரூ. 2,353 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகியதுடன் ரூ. 661 மதிப்புள்ள பொருள்கள் விற்பனையுமாகியுள்ளன. விவசாயிகளுக்கு 300 தென்னங் கன்றுகளும் 22 டன் நெல் விதைகளும் வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

### தோவாளை

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் சுப்பிரமணியபுரம்

---

[சென்ற இதழிலிருந்து தொடங்கப்பட்டுள்ள புதிய பகுதி இது. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்றும் அரும்பணிகள் இங்கே சுருக்கமாக வெளியிடப்படுகிறது. —ஆசிரியர்.

---

விவசாய முன்னேற்றத் திட்டத்தில் உயர் ரக, ஏ.டி.டி. 27 நெல் விதை 250 எக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. கால்நடைப் பிரிவில் 137 கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. 39 கால்நடைகளுக்கு காயடிக்கப்பட்டதுடன், 853 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசியும் போடப்பட்டுள்ளது.

கருமார்களின் பொது வேலைக் கடன்கள் திருவாதவூர், கீழவளவு, சுத்தப்பட்டி ஆகியவற்றில் உள்ளதை தொடர்ந்து பராமரிக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### சோழவரம் ஒன்றியம்

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்க்கண்ட 12 பள்ளிக் கட்டிடங்களுக்கு கோடை விடுமுறையில் சீரணித் தொண்டர்களால் வெள்ளை அடித்து சுத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

### திருவட்டார்

திருவட்டார் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் 97 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. விவசாயத் திட்டத்தின் கீழ் 663 கிலோ நெல் விதைகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது.

1,290 டன் கலப்பு உரம் தயார் செய்யப்பட்டது. 743 கோழிகளுக்கும், 101 மாடுகளுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டன.

### முஞ்சிறை

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் 81 டன் இரசாயன உரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பயிர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 11 டியூப் தெளிப்பான்கள் அளிக்கப்பட்டுள்ளது. 14 மாடுகளுக்குக் காயடிக்கப்பட்டுள்ளது. மாதாந்திர வளரும் கணக்குகளும் 17 திறக்கப்பட்டுள்ளன.

அழகிய நகர் ஆகிய இடங்களில் முறையே ரூ. 17,500 ரூ. 21,900 மதிப்பீட்டில் உயர் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

### குருந்தங்கோடு

குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் விவசாயத் திட்டத்தின் கீழ் 1,200 தென்னங் கன்றுகளும், 2½ டன் நெல் விதையும் விநியோகம் செய்யப்பட்டது. பயிர் பாதுகாப்பு மருந்து 450 கிராம், மற்றும் பூச்சி கொல்லி புட்டிகள் 38-ம் விநியோகம் செய்யப்பட்டன. கால்நடை திட்டத்தின் கீழ் 481 கோழிகளுக்கும், 50 மாடுகளுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டன.

மீன் வளம் பெருகுவதற்காக ரூ. 10,600 மதிப்புள்ள நைலான் நூல் மீனவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. தபால் நிலைய சேமிப்பு கணக்கில், ரூ. 5,400-ம் வளரும் மாதக் கணக்கில் ரூ. 5,175-ம் சேமிக்கப்

பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 28 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**மேல்புறம்**

விவசாயிகளுக்கு 2,115 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 113 ஏக்கர் நிலத்தில் பயிர் பாதுகாப்பு முறை கையாளப்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 52 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**இராஜாக்கமங்கலம்**

இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய வட்டாரத்தில் முதல் தர நெல் வித்துக்கள் 15·477 கிலோ விநியோகம் செய்யப்பட்டது. 66 ஏக்கர் காய்கறி தோட்டங்களுக்கு பயிர் பாதுகாப்பு செய்யப்பட்டன. விவசாயிகளுக்கு 350 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டது. கால்நடைத் திட்டத்தில் 46 கால் நடைகளுக்கு சிகிச்சை செய்யப்பட்டது. 1,172 கோழிகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் 37 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

**தக்கலை**

தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 21 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 11,630 வசூல் செய்யப்பட்டுள்ளது. 280 கோழிகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. 30 கிலோ நைலான் வலை பாதி விலையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**கொங்கணபுரம் ஒன்றியம்**

கொங்கணபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மே திங்களில் ஆற்றிய பணிகள் வருமாறு:—

கொங்கணபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வாழக்குட்டயம்பு காவடிக்காரனூர், ரங்கம்பாளையம் கிராமங்களில் கிராமத்திற்கு ரூ. 10,000 மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

இந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முந்தையம்பட்டியில் ரூ. 3,000 மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளாளபுரம் கிராமத்தில் ரூ. 3,000 ஒரு பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு 29—5—1968 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**மகளிர் நலம்**

வெள்ளாளபுரம் வாசுகி மகளிர் மன்றத்தின் சார்பில் ரூ. 150 பெருமான குடிநீர் பாத்திரங்கள் வெள்ளாளபுரம் துவக்கப் பள்ளிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

**சீரணிப் படை**

இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 38 பள்ளிகளிலும் உள்ள எல்லா கட்டிடங்களுக்கும் சீரணிப் படை தொண்டர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் வெள்ளையடித்து முடிக்கப்பட்டுள்ளது.

**கடன் விநியோகம்**

இந்த ஊராட்சி ஒன்றியத்தில், 1967–68 நிதி ஆண்டில் புதிய கிணறு மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 1,78,000 கிணறுகள் அடி வெட்டுக்கும் உழவு மாடுகள் வாங்கவும் ரூ. 63,000-மும், பம்பு செட்டுகள் வாங்க ரூ. 15,000-மும் விவசாயிகளுக்குக் கடன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊராட்சி ஒன்றியத்தின் சுமார் ரூ. 14,000 அளவில் கிணறுகளுக்கு துளைபோடும் கருவி ஒன்று வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

Phone : 245

HABIB STORES

"SYED MANZIL", VIRUDHUNAGAR

*Branch :* SATTUR

*Agents :*

* M/s. General Radio & Appliances Limited.
* M/s. Addisons Paints & Chemicals.
* M/s. National Tobacco Company of India Limited.
* M/s. Nutrine Confectionery Company Private Limited.

*Proprietors :* HABIB INDUSTRIES, Virudhunagar,

*Manufacturers :* **Quality Water Proof Papers and Allied Products**

**என்றும்போல் அன்றையபொழுதும் மலர்ந்தது சிர்சா கிராமத்தில். நிர்மலமான ஆகாயம்; குளிர்ந்த காற்று மக்களின் மனதில் ஒரு நிம்மதியை, நம்பிக்கையையூட்டின. மக்கள் அவரவர் வேலையில் முனைந்து செயல்படுபவராயினர். ஆனால் அது சிறிது நேரத்திலேயே மாறிவிட்டது.**

# தெவிட்டாத இன்பம்

எட்டு திக்குக்களிலிருந்தும் கார்கள் அக்கிராமத்தையடைந்தன. அவற்றில் சில 'ஜீப்' கார்கள்; சில பெரிய கார்கள். அவையனைத்தும் சிவப்பு முக்கோணத்தைத் தாங்கிக் கொண்டு ஓர் அணியில் வந்து நின்றன. அவை மருத்துவர்கள், உதவியாளர்கள், மருந்துகள், கருவிகளைக் கொணர்ந்தன.

அலகாபாத் மாவட்டத்திலுள்ள "உருவா" வட்டாரத்தலைமையிடமே ஒரு சிறு மருத்துவக்கூடமாக மாறி விட்டிருந்தது. கார்களிலிருந்து இறங்கிய மருத்துவர்களும், உதவியாளர்களும் பற்பல அறைகளுக்குட் சென்று தங்களை தயார் படுத்திக் கொண்டு விட்டனர். அவர்கள் கிராமவாசிகளை எதிர் நோக்கிய வண்ணம் இருந்தனர்.

### மனமுவந்து முன் வந்தனர்

இவையெல்லாம் எதற்காக இருக்கலாம்? கிராமவாசிகளை, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் சேர்த்து, அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவும், கருத்தடை வளையத்தைப் (லூப்) பொருத்துவதற்காகத்தான்.

காலை மணி பதினொன்றைச் சிறிது தாண்டியிருக்கலாம். மக்கள் மெதுவாக வந்து கொண்டிருந்தனர், வட்டாரத் தலைமையிடத்தை நோக்கி. நேரம் செல்லச் செல்ல, மக்கள் பெருமளவில் வரத் தொடங்கி விட்டனர்.

### எதிர்நோக்கிய கிராமவாசிகள்

அக் கூட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வந்திருந்தோரும், அவர்களை அழைத்து வந்திருந்தோரும், கருத்தடை வளையத்தை தரித்துக்கொள்ள வந்திருந்த மகளிரும் காணப்பட்டனர். அவர்கள் வரிசையில் நின்று தமது முறையை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். மருத்துவர்களும் சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபட்டனர்.

மாலையில் எல்லோருக்கும் சிகிச்சை முடிந்தவுடன், கணக்கிட்டு பார்க்கையில், அறுவை சிகிச்சை செய்து கொண்டோரும், "லூப்" பொருத்திக் கொண்டவருமாக 200 பேர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை உளமார ஏற்றுக்கொண்டிருந்தனர்.

### இது ஒன்றல்ல

இவ்வட்டாரம் ஒன்றுதான், இப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஆர்வம் காட்டினதாக எண்ண வேண்டாம். இதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, கோரா ஆன் என்ற மற்றொரு இடத்தில் 285 கிராமவாசிகள், இப் பயனைப் பெற்றனர்.

அலகாபாத் மாவட்டத்திலுள்ள இன்னொரு வட்டாரம் மேஜா. இங்குள்ள நிலங்களில் 16 சத வீதத்திற்குத்தான் நீர்ப்பாசன வசதியிருக்கிறது. ஆனால் இந்த குறைந்த அளவு பாசனத்தைச் சார்ந்து சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

### வறட்சி அளித்த தைரியம்

சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியால், மேஜா வட்டம் பெரும் அவதிக்குள்ளாகியது; மக்கள் அதை தைரியத்துடன் எதிர்த்து போராடி வாகை சூடினாலும், மனத்தில் நிறைவு இல்லை. எனவே அவர்கள் எண்ணம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு தானே திரும்பியது.

வெள்ளத்தை எதிர்த்து போராடலாம்; வறட்சியுடன் போரிட்டு வெல்லலாம். அவையெல்லாம் சிறிது காலம் துன்பம் தந்து பின் மறையக் கூடியவை. ஆனால் மக்கள் தொகைப் பெருக்கமோ, காலா காலம், தலை முறைக்கு வந்த, பிரச்னையல்லவா? எனவே மேஜா மக்களின் ஆர்வம் இதில் சென்றதில் வியப்பில்லை.

### இருமுறை முதல் பரிசு

1967-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தில் மேஜா வட்டம் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு சென்று விட்டது. அந்த வட்டாரத்தில் சுமார் 500 பேர்கள் அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டும், "லூப்" பொருத்திக் கொண்டும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மனதார ஏற்றுக் கொண்டனர். "திட்டமிட்டக் குடும்பம், தெவிட்டாத இன்பம்" அல்லவா?

அடுத்த ஆண்டு, அதாவது 1968 பிப்ரவரி நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திலும், மேஜா வட்டமே முதல் பரிசைப் பெற்றது. இது போது 600 பேர்கள் இத்திட்டத்தில் பங்கு பெற்று மகிழ் வெய்தினர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை எதிர்த்துப் போராடும் நம் கிராமங்களின் பிரதிநிதியாக மேஜா வட்டம் விளங்குகிறது. எதிரிகளின் படையெடுப்பைவிட, மக்கள் தொகைப் பெருக்கம் பயங்கரமானது என்று எண்ணி, அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்று, பிற கிராமங்களுக்கு ஒரு சான்றாக விளங்குகிறார்கள்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு, திராட்சைப் பயிர் செய்வதில் முனைந்தேன். ஆனால் அதில் எனக்கு பெரிய தோல்வியே ஏற்பட்டது. எனவே இம்மாதிரி ஆபத்து நிறைந்த பயிர்களில் ஈடுபடுவது தவறு" என்று என் சக உழவர்கள் என்னை எச்சரித்தார்கள். "என்னை ஒரு முட்டாள்" என்று கூட சொல்ல அவர்கள் தவறவில்லை.

# ஓர் இனிப்புக் கதை



"இப்போது எப்படி?"

"ஆனால் இப்போது என்னுடைய மதுரமான திராட்சைகளை அவர்கள் நாள்தோறும் சுவைத்து இன்புற்றிருக்கின்றனர். என்னைப் பெரிதும் பாராட்டுகின்றனர்" என்றார் திரு மாணிக்க ராவ் பாடில்.

மைசூர் மாநிலத்திலுள்ள பீதார் மாவட்டத்தின் ஹல்லி என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு பாடில் அவர்களுக்கு, திராட்சை உற்பத்தியில் பெரிதும் ஆர்வம் உண்டு. அதில் முனைந்து ஈடுபட்டு, அதில் வெற்றிகாண அவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் சில ஆண்டுகள் அவர் தோல்வியையே தழுவினாலும், இறுதியில் வெற்றி, இலாபம் அவர் பக்கம் தான்.

"நண்பர்களின் எச்சரிக்கைகளுக்கு சிறிதும் செவி சாய்க்காமல், இப் பயிரில் முனைந்தேன். ஓர் ஏக்கர் நிலத்தில், 1957-ம் ஆண்டு திராட்சை நட்டேன். ஆனால் என்னுடைய அறியாமையின் காரணமாக, எனக்கு தோல்வியே கிடைத்தது. கிராமவாசிகளின் நகைப்புக்கு ஆளானேன்" என்றார் திரு பாடில்.

ஆனால் திரு பாடில் சிறிதும் மனம் தளரவில்லை. மீண்டும் அடுத்த ஆண்டில் திராட்சைப் பயிர் செய்யத் தொடங்கினார். அயராது உழைத்து, பயிரைக் காப்பாற்றினார். அப்படியிருந்தும் கூட அவருக்குக் கிடைத்த மகசூல் திருப்தி கரமாயில்லை.

## இறுதிவரை இழப்பல்ல

மைசூர் அரசின் தோட்டக்கலைத் துறை இவரது மாவட்டமான பீதாரில் ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தியது. அந்த ஆண்டிலேயே இவருக்கும் புது உற்சாகம் ஏற்பட்டது. அலுவலர்களை அனுகி, இவரது பயிர் பற்றி விசாரணை செய்ய முற்பட்டு, செயலிலும் இறங்கினார். தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் இவருக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவையும், யோசனைகளையும் மனமுவந்து அளித்து, பல வழிகளில் உதவி செய்தனர்.

அதுவரை, அவருக்கு, திராட்சைப் பயிரில் பெரும் இழப்பு தான் கிடைத்ததேயன்றி, பிறரின் நகைச் சொல்லிற்கு உரியவராகவும் இருந்தார்.

தோட்டக்கலைத் துறையினரின் ஆலோசனைகளை, திறம்பட பின்பற்றி குழிகள் தோண்டி, நட்டு, உரமிட்டு, பூச்சி மருந்துகள் அடித்து பயிரை செவ்வனே, கண்ணும் கருத்துமாய் பாதுகாத்தார். இரும்புக் கம்பிகளைக் கொண்டு நல்ல பந்தலை அமைத்தார். தொழில் நுட்பத்தை நன்கு கையாண்டதால், 1962-ம் ஆண்டில் அவருக்கு பெருமளவில் மகசூல் கிடைத்து. அதன் வாயிலாக அவருக்கு சுமார் ரூ 7,000 இலாபம் கிடைத்தது. இதைத் தவிர இன்னொரு முக்கியமான இலாபமும் அவருக்குத் தானாகவே கிடைத்தது. அதுதான் அவருக்குக் கிடைத்த, மனோதிடம், தன்னம்பிக்கை.

### எண்ணிலடங்கா தோட்டங்கள்

வெற்றிவாகை சூடிய அவருக்கு திராட்சைப் பயிரில் மேலும் ஆர்வம் பெருகுகிறது. ஓர் ஏக்கரில் பயிர்செய்த அவர், மேலும் ஓர் ஏக்கருக்கு திராட்சையை விரிவு படுத்தினார். தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்த வழி முறைகளை, செயல் விளக்கங்களை அப்படியே கவனமாக பின்பற்றினார்.

அதன் காரணமாக அவருக்கு ஆண்டிற்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை வருவாய் கிடைக்கிறது. பீதார் மாவட்டத்திற்கே, அவர் தான் ஒரு மாதிரி திராட்சை விவசாயி. அவருடைய திராட்சைத் தோட்டமே மற்றவர்களின் தோட்டத்திற்கு ஒரு முன்மாதிரி. இவரைப்பின்பற்றிபெரும் பாலானவர்கள் திரட்சைப் பயிரில் ஈடுபட்டுள்ளனர். பீதார் மாவட்டத்தில் எண்ணிலடங்கா தோட்டங்களை இன்று காணமுடிகிறது.

திராட்சைப் பயிர் செய்வதில் திரு பாடில் ஒரு நிபுணராகி விட்டார் என்றே கூறலாம். "ஒரு புதிய டாக்டருக்கு, பழைய நோயாளி எவ்வளவோ சிறந்தவர்" என்கிறார் திரு பாடில். இது அவர் கண்ட அனுபவம்.

அவர் திராட்சையை எப்படி பயிரிடுகிறார்? அதை அறிவது பயனுடையதல்லவா?

15 முதல் 20 அடி இடை வெளியில் அவர் தண்டுகளை நடுகிறார். நட்ட 6 முதல் 9 மாதங்களுக்குள், கற்கலாலான தூண்களை நட்டு, வலுவான பந்தலை அமைக்க வேண்டும். வலுவான பந்தலிருந்தால், அனேக செலவுகள் தானே குறையும்" என்கிறார் திரு பாடில் அவர்கள்.



### வெற்றிக்கு உழைப்பு

அக்டோபர்-நவம்பர் மற்றும் மார்ச் ஏப்ரல் மாதங்களில்—அதாவது ஆண்டிற்கு இரு முறை—அவற்றை வெட்டி விடவேண்டும். அவ்வாறு செய்கையில் கால நிலையை கருத்தில் கொள்ள வேண்டும்.

தகுந்த முறையில் கலவையுரங்களை யும், ரசாயன உரங்களையும் இடுவது, உரிய காலத்தில் பூச்சி மருந்துகளைத் தூவுதலும், தெளித்தலும் அடுத்தடுத்து கவனிக்க வேண்டிய முக்கியமான காரியங்களாவன. திரு பாடில், ஓர் ஏக்கருக்கு 30 வண்டி கலவையுரமும், ஒரு செடிக்கு 5 கிலோ கடலைப் புண்ணாக்கு, 3 கிலோ மீன் உரமும் இட்டார். இவை தவிர, ஒரு செடிக்கு ஒரு கிலோ பொட்டாசியம் சல்பேட், 4 கிலோ சூப்பர் பாஸ்பேட், ¼ கிலோ அம்மோனியம் சல்பேட், ஒரு கிலோ ஸ்பார்டின் ஆகியவற்றை ஏப்ரல், அக்டோபர் மாதங்களில், இட வேண்டும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பூச்சி மருந்து அடிப்பது மிகவும் அவசியம்.

### கண்கொள்ளாத் திராட்சை.

திரு மாணிக்கராவ் பாடிலின் திராட்சைத் தோட்டத்தில், ஒரு கொடியில் 200 திராட்சைக் குலைகளை காண்பது, கண்களுக்கு பெருவிருந்தாய் காட்சியளிக்கிறது. ஒரு குலை சுமார் ஒரு கிலோ எடை இருக்கிறது. இம்மாதிரியான குலைகளுக்கு கனத்தைத்தாங்க அடியிலிருந்து முட்டு கொடுப்பது அவசியம். அவ்வாறு அடியிலிருந்து குலைகளுக்கு முட்டுக் கொடுக்கக் கூடிய முறையில் பயிர் செழித்து வளர்ந்துள்ளதென்றால், திரு பாடிலுக்கு அதை விட பெருமை, உற்சாகம் வேறென்ன இருக்க முடியும்?

"உங்களுக்கு திராட்சைப் பயிரில் மட்டும் ஆர்வம் இருக்கிறதா?" என்று அவரை கேட்டதற்கு, "நெல், ஒட்டுச் சோளம், காய்கறிகள், மிளகாய் போன்றவற்றை பயிர் செய்வதிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. ஆனால் பீதார் மாவட்ட மண், வெட்பநிலை ஆகியவற்றைக் கொண்டு நோக்கினால், திராட்சைப் பயிரே சாலச் சிறந்தது" என்றார் திரு பாடில்.

---

"பஞ்சாயத்து ராஜ்", இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள்: 13, 14, 15, 25, 26, 33முதல் 35 வரை

Articles reproduced from 'Panchayati Raj' etc on pages:
13, 14, 15, 25, 26, and from 33 to 35.

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

கிராம நலம்
பகுதி - 2
GRAMANALAM
PART - 2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள் குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## ஊராட்சி வளர்ச்சி—19686-9-ம் ஆண்டு மானியங்களை முறைப்படுத்தல்—வழியுரைக்கும் விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Panchayat Development—Regulation of statutory and non—statutory grants during the year 1968-69—Guiding instructions—issued —

1968-69-ம் ஆண்டில், ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு திட்டங்களில் ஏற்படும் செலவினங்களுக்கு தேவையான வழியுரைக்கும் விளக்க ஆணைகள் கிராமவளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1806-ல் பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணையின் தமிழாக்கத்தை 1967-ம் ஆண்டு நவம்பர் திங்கள் "கிராம நலம்" இதழில் காண்க.) ஊராட்சி ஒன்றியங்களுக்கான செலவினங்களை 1968–69-ம் ஆண்டு முழுவதற்கும் முறைப்படுத்துவதற்கு தகுந்த விளக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டியது பற்றி அரசு பரிசீலனை செய்தது.

2. அதற்கேற்ப 1968–69-ம் ஆண்டில் செலவினங்களை முறைப்படுத்துவதற்கு, 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் கிராம, வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25-1-1961-நாளிட்ட அரசு ஆணைஎண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுடன் இவ்வாணையின் இணைப்பிலுள்ள விளக்கக்குறிப்புகளும் சேர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

### இணைப்பு

#### விளக்கக் குறிப்புகள்

பிரிவு 1—உள்ளூர் வருவாய் சாதாரணமானவை

1. உள்ளூர் செல்வரி
2. உள்ளூர் மேல் வரி
3. பதிவுப் பத்திர மேல் வரி
4. கேளிக்கை வரி, மற்றும் காட்சி வரியின் மீது மேல் வரி
5. கிராம வீட்டு வரி
6. உள்ளூர் சிறிய வருவாய்கள்

1968–69-ம் ஆண்டிற்கு மேற்கண்ட வருவாய் மற்றும் மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 மற்றும்அவற்றின்பின்பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு II—அரசு மானியங்கள் (சட்டத்தில் வருபவை):

7. நிலவரி ஒதுக்கீடு (சட்டத்தில் வருபவை).
8. உள்ளூர் கல்வி மானியம்.
9. உள்ளூர் செஸ் மேல் வரி இணைப்பு மானியம்.
10. உள்ளூர் விலைசுள் மானியம்.
11. கிராம வீட்டு வரி இணைப்பு மானியம்.

1968-69-ம் ஆண்டுக்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு 111—அரசு மானியங்கள் (சட்டத்தில் வராதவை).

12. கல்வி துணை மானியம்.
13. ஆசிரியர்களின் அகவிலைப்படிக்குரிய சிறப்பு மானியம்.
14. மதிய உணவு மானியம்.

1968–69-ம் ஆண்டிற்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த, தற்போதுள்ள விளக்க ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

15. சமூகக் கல்வி மானியம் 1968–69-ம் ஆண்டில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இம்மானியத்தின் கீழ் ஏற்படும் செலவு ரூ. 2,000-க்குள் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)இருக்க வேண்டும். கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1960-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாளிட்ட அரசு

ஆணை 2604-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்ப 1968-69-ம் ஆண்டிற்கும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**16. மகளிர், சேய்நல மானியம்**

இந்த மானியத்திற்கான ஆணைகள் தனியாக பிறப்பிக்கப்படும்.

**17. கிராம வேலைகள் மானியம்**

**(அ) இணைப்புச் சாலைகள்**

1968–69-ம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம் மானியத்தின் கீழ், இணைப்புச் சாலைகளுக்காகும் செலவுகள் ரூ. 16,100-க்குள் (ரூபாய் பதினாராயிரத்து நூறு மட்டும்) இருக்க வேண்டும். அரிஜனங்கள் மற்றும் இதர பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக, மேற்கொள்ளப்படும் இணைப்புச் சாலைகளுக்காகும் செலவில் 10 சத வீதத்தை அரிஜன நலத் துறை அளிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இந்த ஆண்டிற்கும் பொருந்தும்.

**(ஆ) குடிநீர் விநியோகம்**

சாதாரணக் கிணறு வேலைகள் மற்றும் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு 1968–69-ம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவுகள் முறையே ரூ. 14,800 (ரூபாய் பதினாலாயிரத்து எண்ணூறு மட்டும்) மற்றும் ரூ. 10,750 (ரூபாய் பத்தாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்)க்குள் இருக்கவேண்டும். அரிஜனங்கள் மற்றும் பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் குடிநீர் வேலைகளுக்கு ஏற்படும் செலவில் 15 சத வீதத்தை அரிஜன நலத் துறை வழங்க வேண்டுமென்று, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதற்குப் பொருந்தும்.

**(இ) பள்ளிக் கட்டிடங்கள்**

ஓர் ஒன்றியத்திற்கு 1968–69-ம் ஆண்டிற்கு ஏற்படும் செலவு ரூ. 7,600 (ரூபாய் ஏழாயிரத்து அறுநூறு மட்டும்) இருக்க வேண்டும். இவ்வாணையின் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலையை கடந்த வட்டாரங்களுக்கு (இணைப்பில் பிற்சேர்க்கை) ஏற்படும் செலவுகள் 28 Education–of–Development Schemes By schemes in the Fourth Plan III Parmacy (iii) Grants to Local Bodies—H- Educational grants to Post Stage II Blocks) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

கிராம வேலைகள் மானியத்திலுள்ள நிதி ஒதுக்கீட்டில் 20 சத வீதம் அரிஜனங்களின் நன்மைக்குரிய வேலைகளில் மட்டும் செலவிடப் படவேண்டும்.

**18. உள்ளூர் பாசன மானியம்**

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1681-ம் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி இந்த மானியத்திற்குரிய செலவுகள் முறைப்படுத்தப் பட வேண்டும்.

**19. வேளாண்மை மானியம்**

கீழ்க்காணும் திட்டங்களுக்குரிய செலவினங்கள் 1968–69-ல் அவற்றிற் கெதிராக குறிப்பிட்டுள்ள தொகைகளுக்குள் இருக்கவேண்டும்.

**1. வேளாண்மைத் திட்டங்கள்.**—ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 21,800 (ரூபாய் இருபத்தி ஓராயிரத்து எண்ணூறு மட்டும்).

**2. கால்நடைபராமரிப்புத் திட்டங்கள்.**-ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 6,10 (ரூபாய் ஆறுயிரத்து நூறு மட்டும்).

**3. மீன்வளம்.**—மீன்வளம் திட்டங்களுக்கான செலவுகளை முறைப்படுத்துவதற்குரிய ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

இத் திட்டங்களை நிறைவேற்ற கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2064 மற்றும் அத்துறையின் 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2115 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

**20. மகப்பேறு நிலையங்கள் நிர்வகிப்பு மானியம்.**

**21. மருந்தகங்கள் நிர்வகிப்பு மானியம்.**

இம் மானியங்களை முறைப்படுத்த இப்பொழுதுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

## பிரிவு IV—உள்ளூர் வருவாய் (சிறப்பானவை)

**22. உள்ளூர் பாசனக் கட்டணம்**

**23. கிராம வளர்ச்சி விகிதங்கள்**

**24. தன்னிச்சையாக அளிக்கும் வளர்ச்சி நன்கொடைகள்**

மேற்கண்ட வருவாய் ஆதாரங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

## பொதுவானவை

இவ்வாணையில் விவரிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளெல்லாம், முடிவுறாத வேலைகளுக்கே முதலில் பயன்படுத்தப்படவேண்டும். முடிவுறாத வேலைகளுக்குரிய செலவுகளைக் சரிக்கட்டிய பின்னரே, புதிய வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது. சில ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகள் சற்று கூடுதலாகவே இருக்கலாம். அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவு செய்ய அக் கோட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அக் கோட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிடையே தாம் விரும்பியபடி வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மறு நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால், இந்த மறு நிதி ஒதுக்கீடானது அக் கோட்டம் முழுவதற்கும் சம்பந்தப்பட்ட திட்டத்திற்

குரிய நிதி ஒதுக்கீட்டிற்கு மேற்படக் கூடாது. அதேபோன்று மாவட்ட அளவில், சம்பந்தப்பட்ட திட்டத்திற் குரிய நிதி ஒதுக்கீட்டை, அந்த மாவட்டத்திற்கு அந்த திட்டம் முழு வதற்குமுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மறு நிதி ஒதுக்கீடு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றங்கள் செய்கையில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்கள் ஒரு புறத்திலும் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் மற்றொரு புறத்திலும் தனித் தனியே உள்ளவாறு மறு நிதி ஒதுக் கீட்டை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களின் பெயர்களை பிற் சேர்க்கையில் காண்க. பல்வேறு திட்டங்களுக்குரிய செலவினங்கள், பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத் தலைப்புகள், கிராம வளர்ச்சி இயக்கு நர் அலுவலகத்தின் குறிப்பாணை எண் 63240. கணக்கு 1/68-1 நாள் 5—4—1968-ன்படி இருக்கவேண்டும்.

## இணைப்பிற்குரிய பிற்சேர்க்கை

**1968-69-ல் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் பட்டியல்.**

**1. செங்கற்பட்டு மாவட்டம் :**

1 திருக்கழுக்குன்றம்
2 பூண்டி
3 திருவள்ளூர்
4 கடம்பத்தூர்
5 பள்ளிபேட்டை
6 எல்லாபுரம்
7 ஸ்ரீபெரும்புதூர்
8 பூவிருந்தவல்லி
9 மதுராந்தகம்
10 பரங்கிமலை
11 மீஞ்சூர்
12 காட்டாங்குளத்தூர்
13 உத்திரமேரூர்

**வட ஆர்க்காடு மாவட்டம் :**

14 கலசப்பாக்கம்
15 துரிஞ்சாபுரம்
16 கீழ்ப்பெண்ணாத்தூர்
17 போளூர்
18 கே. வி. புரம்
19 சேத்துப்பட்டு
20 ஆர்க்காடு
21 வேம்பாக்கம்
22 பெரணமல்லூர்
23 திருப்பத்தூர்
24 ஆரணி

**தென் ஆர்க்காடு மாவட்டம் :**

25 கீரப்பாளையம்
26 மேல்புவனகிரி
27 பண்ருட்டி
28 குறிஞ்சிப்பாடி
29 சின்னசேலம்
30 மேலமலையனூர்
31 கள்ளக்குறிச்சி
32 செஞ்சி
33 மங்களூர்
34 உடுமலைப்பேட்டை
35 மரக்காணம்
36 திருநாவலூர்
37 கோலியனூர்

**தஞ்சாவூர் மாவட்டம் :**

38 திருத்துறைப்பூண்டி
39 வேதாரணியம்
40 தலைஞாயிறு
41 அம்மாபேட்டை
42 வலங்கைமான்
43 கொள்ளிடம்
44 சீர்காழி
45 திருப்பனந்தாள்
46 மாயூரம்
47 செம்பனார் கோவில்
48 குத்தாலம்
49 கும்பகோணம்
50 திருவிடைமருதூர்
51 பாபநாசம்
52 முத்துப்பேட்டை
53 பட்டுக்கோட்டை
54 ஒரத்தநாடு
55 ஆவுடையார்கோவில்
56 நாகப்பட்டினம்
57 கீவளூர்
58 குடவாசல்

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**

59 கே. பரமத்தி
60 வேப்பந்தட்டி
61 முசிறி
62 தாத்தையங்கார் பேட்டை
63 திருவரங்குளம்
64 அரவக்குறிச்சி
65 தொட்டியம்
66 திருமானூர்
67 பெம்பலூர்
68 துறையூர்
69 அரியலூர்
70 லால்குடி
71 குளித்தலை

**மதுரை மாவட்டம் :**

72 மதுரை (கிழக்கு)
73 மேலூர் (வடக்கு)
74 வாடிப்பட்டி
75 அலங்கா நல்லூர்
76 ரெட்டியார் சத்திரம்
77 ஆத்தூர்
78 மேலூர் (தெற்கு)
79 மதுரை (மேற்கு)
80 உசிலம்பட்டி
81 செல்லம்பட்டி
82 திருமங்கலம்
83 கள்ளிக்குடி
84 டி. கல்லுப்பட்டி
85 சேடப்பட்டி
86 திண்டுக்கல்
87 போடிநாயக்கனூர்
88 பழனி
89 ஆண்டிப்பட்டி
90 வத்தலக்குண்டு
91 நத்தம்
92 திருப்பரங்குன்றம்

**இராமநாதபுரம் மாவட்டம் :**

93 ஸ்ரீவில்லிப்புத்தூர்
94 சிவகாசி
95 வத்திராயிருப்பு
96 ராஜபாளையம்
97 சிங்கம்புனேரி
98 கண்ணங்குடி
99 இராஜசிங்கமங்கலம்
100 திருவாடானை
101 காளையார் கோவில்
102 தேவகோட்டை
103 கமுதி
104 விருதுநகர்
105 கரியாப்பட்டி
106 கல்லல்
107 மானமதுரை
108 கடலாடி
109 முதுகுளத்தூர்
110 சாத்தூர்
111 பரமக்குடி
112 வெம்பக் கோட்டை

திருநெல்வேலி மாவட்டம் :

113 பரமக்குடி
114 சேரன்மாதேவி
115 சங்கரன்கோவில்
116 மேல நீலித நல்லூர்
117 குருவிக்குளம்
118 கோவில்பட்டி
119 வள்ளியூர்
120 இராதாபுரம்
121 மானூர்
122 ஆலங்குளம்
123 கருங்குளம்
124 சாத்தான்குளம்
125 வாசுதேவ நல்லூர்
126 ஆத்துக்குடி

கன்னியாகுமரி மாவட்டம் :

127 அகஸ்தீஸ்வரம்
128 மேல்புரம்
129 முன்சிறை
130 இள்ளியூர்
131 குருத்தன்கோடு
132 இராஜக்காமங்கலம்

நீலகிரி மாவட்டம் :

133 உதகமண்டலம்
134 குன்னூர்
135 கோட்டகிரி
136 கூடலூர்

கோயம்புத்தூர் மாவட்டம் :

137 சத்யமங்கலம்
138 கோபிசெட்டிப்பாளையம்
139 ஈரோடு
140 பெருந்துறை
141 கொடுமுடி
142 மொடக்குறிச்சி
143 துக்கநாயக்கன்பாளையம்
144 பல்லடம்
145 சுல்தான்பேட்டை
146 திருப்பூர்
147 பொங்கலூர்
148 காங்கேயம்
149 வெள்ளக் கோவில்
150 குண்டடம்
151 தாராபுரம்
152 அவினசி
153 சூலூர்
154 பவானி
155 கிணத்துக்கடவு
156 பவானிசாகர்
157 பெரியநாயக்கன்பாளையம்
158 தளவாடி

சேலம் மாவட்டம் :

159 கங்கவல்லி
160 தளவாசல்
161 பெத்தநாயக்கன் பாளையம்
162 ஆத்தூர்
163 கொளத்தூர்
164 நாமகிரிப்பேட்டை
165 நங்கவல்லி
166 மேச்சேரி

தர்மபுரி மாவட்டம் :

167 கிருஷ்ணகிரி
168 வேப்பனப்பள்ளி
169 காவிரிப் பட்டினம்
170 பருகூர்
171 பெண்ணுகரம்
172 ஊத்தங்கரை
173 மொரப்பூர்
174 ஹோசூர்
175 தர்மபுரி

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 26—6—1968 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1237-ன் சுருக்கம்.)

---

## ஊராட்சிகளிலுள்ள சாலைகளின் முன்னேற்றம்—பேரூராட்சிகளில் தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க மானியம்.

## Grants—Improvements to village roads within Panchayats for providing dustless surfacing of roads—Budget provision for 1968—69—Rs. 5 lakhs—Sanctioned.

தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க, பேரூராட்சிகளுக்கு பாதி மானியம் வழங்க, நடப்பாண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-ஏ-ன் கண்டுள்ளபடி, தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க ஏற்படும் செலவுகளுக்கு பாதி மானியம் அளிக்கும் வகையில் பேரூராட்சிகளை தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு மானியம் வழங்கும் அதிகாரம் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்கப்பட்டது.

2. இச் செலவினம் "50. பொதுப் பணி 1—மானிய உதவி சி. கிராமப் போக்குவரத்துக்காக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள் (1) ஊராட்சிப் பகுதி [50 Public works—1. Grants-in-aid-c. Grants to local bodies for village Communication—[i]. Panchayat area"] என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

3. இதில் பின்பற்றப்பட வேண்டிய நடை முறை விதிகளைப் பொறுத்த வரையில், கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்துக்களை அரசு ஏற்றுக் கொண்டு, கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

(அ) கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-ஏ-ல் வெளியிடப்பட்டுள்ள விளக்க ஆணைகளைத் தழுவி, ஊராட்சிக்கு 2 வீதம், இத்திட்டத்தை ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) தொடர்புள்ள வருவாய்க் கோட்ட அதிகாரியின் பொறுப்பில் இம் மானியம் ஒப்படைக்கப்படும். வேலைகளை நிறைவேற்றியதன் பேரில் இம் மானியத் தொகையை தொடர்புள்ள ஊராட்சிக்கு அவர் தருவார்.

(இ) பேரூராட்சிகளில் நடைபெறும் வேலைகளின் முன்னேற்றத்

தை அப்பகுதியின் வருவாய்க்கோட்ட அதிகாரி மேற்பார்வையிடுவார்.

(ஈ) மாதாந்திர முன்னேற்ற அறிக்கையும், ஓராண்டு செலவின பட்டியல்களையும் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவதை அவர் பரிசீலித்து, கவனித்து வருவார்.

4. கிராம வளர்ச்சி இயக்குநரே திட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் நிதிக் கட்டுப்பாடு அதிகாரியாகவும் தொடர்ந்திருந்து வருவதோடு, நிதிகளை ஒதுக்குவதற்கும் மானியம் பயன்படுத்தப்படுவதை கவனிப்பதற்கும் அவரே பொறுப்பாளியாவார்.

5. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-எ-ல் பிறப்பிக்கப்பட்ட விளக்க ஆணைகள், இந்த அளவிற்கு மாற்றப்படுகின்றன.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 27-6-1968-பட்ட அரசு ஆணை எண் 1245-ன் சுருக்கம்).

---

## கிராமத் தொழில்கள் திட்டங்கள்—கிராமத் தொழில்களுக்கான திட்டக் குழுக்கள்—நாங்குநேரி ஓமலூர், ஸ்ரீபெரும்புத்தூர்—மீண்டும் அமைத்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன,

## Rural Industries Project—Project Committees for Rural Industries—Nanguneri, Omalur Sriperumbudur—Reconstitution—Orders-Issued.

நாங்குநேரி, ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்களுக்கான மூன்று திட்டக் குழுக்களின் பதவிக்காலம் 31—8—1967 அன்று முடிவுற்றுவிட்டது.

2. நாங்குநேரி, ஓமலூர், ஸ்ரீ பெரும்புதூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்களுக்குரிய மூன்று திட்டக் குழுக்கள் இவ்வாணையின் மூன்று இணைப்புகளிலும் உள்ளவாறு, உடனடியாக, மீண்டும் அமைக்கப்படவேண்டுமென்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

3. இக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் 31—3—1972-அன்று முடிவுறும். சாதாரணமாக், இக்குழுக்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடும். அவசியமாயின், அடிக்கடியும் கூடும்.

** ** **

### இணைப்பு 1

**மீண்டும் அமைக்கப்பட்ட திட்டக் குழு நாங்குநேரி [திருநெல்வேலி மாவட்டம்]**

1. திரு ஹாஜி எம். எம்., பீர் முஹம்மது, எம். எல்.ஏ.—தலைவர்.

2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், நாங்குநேரி—செயலாளர்.

3. வருவாய்க் கோட்ட அதிகாரி, சேரன் மாதேவி.

4. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி திருநெல்வேலி.

5. தொழில், வணிக உதவி இயக்குநர், திருநெல்வேலி.

6. மாவட்ட மகளிர் நல அதிகாரி, திருநெல்வேலி.

7. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, தென்காசி.

8. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, தென்காடு.

9. மீன் வளர்ச்சி துணை இயக்குநர், தூத்துக்குடி.

10. கோட்ட மின் பொறியாளர் (இயக்குதல் பராமரிப்பு), திருநெல்வேலி.

11. கோட்டப் பொறியாளர், (இயக்குதல், பராமரிப்பு, மின்சாரம்) நாகர்கோவில்.

12. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, திருநெல்வேலி.

13. தலைவர், தெற்கு திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின், தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.

14. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, நாங்குநேரி.

15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, இராதாபுரம்.

16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, களக்காடு.

17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, வள்ளியூர்.

18. திட்டப்பகுதியிலுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும்.

19. திரு ராதாசங்கர், தலைவர், இராதாபுரம், ஊராட்சி.

20. திரு கலைஞர் எம். பி. எம். அப்துல் காதர், எருவாடி.

21. திரு எஸ். சேதுராமலிங்கம், நிலக்கிழார், களக்காடு.

22. திரு எம். பி. கிளமெண்ட், பி.எ., பி.எல்., வழக்கறிஞர், தொணுவர் அஞ்சல், நாங்குநேரி.

## இணைப்பு 2

மீண்டும் அமைக்கப்பட்ட திட்டக்குழு, ஓமலூர்
(சேலம் மாவட்டம்)

1. திரு கே. ஆர். கோவிந்தன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.—தலைவர்.

2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், ஓமலூர்—செயலாளர்.

3. வருவாய்க் கோட்ட அதிகாரி, மேட்டூர்.

4. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி, சேலம்.

5. தொழில், வணிக துணை இயக்குநர், சேலம்.

6. மாவட்ட மகளிர் நல அதிகாரி, சேலம்.

7. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, சேலம்.

8. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, சேலம்.

9. மீன் வளர்ச்சி உதவி இயக்குநர், மேட்டூர்.

10. கோட்டப் பொறியாளர் (அமைப்பு வேலை) மேட்டூர் மின்சார அமைப்பு, சேலம்.

11. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியா, மேட்டூர்.

12. தலைவர், வடக்கு சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.

13. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஓமலூர்.

14. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, காடையாம்பட்டி.

15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, தாரமங்கலம்.

16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, மேச்சேரி.

17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, நங்கவல்லி.

18. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, கொளத்தூர்.

19. திட்டப் பகுதியிலுள்ள சட்ட மன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும்.

20. திரு எ. பானு, சேலம் கேம்ப், மேட்டூர், அணை, ஆர். எஸ்., சேலம் மாவட்டம்.

21. திரு பி. என். வெங்கடாசலம், தலைவர் புக்கம்பட்டி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம்,

22. திரு பெருமாள், தலைவர், கருவல்லி, ஊராட்சி, கடையாம்பட்டி, ஊராட்சி ஒன்றியம், ஓமலூர், தாலுகா. சேலம் மாவட்டம்.

23. திரு கே. ராமலிங்க ஆசாரி, தலைவர், கொளத்தூர் கருமார், தச்சுத் தொழிலாளர் கூட்டுறவு தொழில் சங்கம் லிமிடெட்.

## இணைப்பு 3

மீண்டும் அமைக்கப்பட்ட ஸ்ரீபெரும்புதூர்
[செங்கற்பட்டு மாவட்டம்]

1. திரு டி. ராஜரத்தினம், எம்.எல்.ஏ.—தலைவர்.

2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், ஸ்ரீபெரும்புதூர்—செயலாளர்.

3. வருவாய்க் கோட்ட அதிகாரி, காஞ்சிபுரம்.

4. வருவாய்க் கோட்ட அதிகாரி, திருவள்ளூர்.

5. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).

6. தொழில், வணிக உதவி இயக்குநர், செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).

7. மாவட்ட மகளிர் நல அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).

8. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, செங்கற்பட்டு.

9. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).

10. மீன் வளர்ச்சி உதவி இயக்குநர், செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).

11. கோட்ட பொறியாளர், (மின்சாரம்) அமைப்பு வேலைப் பிரிவு, காஞ்சிபுரம்.

12. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஸ்ரீபெரும்புதூர்.

13. தலைவர், வடக்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள் தொழிலாளர் நல நிலைக் குழு.

14. தலைவர், தெற்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.

15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஸ்ரீ பெரும் புதூர்.

16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, பூவிருந்தவல்லி.

17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, குன்னத்தூர்.

18. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஈக்காடு.

19. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, கடம்பத்தூர்.

20. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, பூண்டி.

21. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஊத்துக் கோட்டை.

22. திட்டப் பகுதியிலுள்ள சட்டமன்ற நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும்.

23. திரு ஆர். எஸ். ராதாகிருஷ்ணன், கவரைத் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை.

24. ரெவரண்ட், ஃபாதர் இன்னய்யா, பி.ஏ., பி.டி., செல்லப்பட்டிடை இடையர்பாக்கம் அஞ்சல், அரக் கோணம் வழி.

25. திரு ஜி. தாஸ், உரிமையாளர், சந்திரா பேப்பர் பேண்ட், கரந்தாங்கல் கிராமம், ஸ்ரீபெரும் புதூர், அஞ்சல்.

26. திரு மணிவாசகம், தலைவர், கன்னிகைப்ப கிராமம் மற்றும் அஞ்சல் பெரியபாளையம் வழி திருவள்ளூர் தாலுகா.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1968 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1252.)

**குழந்தைகள் காப்பகங்கள்—"கேர்" நிறுவனத்தின் உதவியுடன் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு உணவளித்தல், மற்றும் குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.**

**Child Welfare—Kuzhandhaigal Kappagams in Madras State—Programme of pre-school feeding and construction of buildings for Kuzhandhaigal Kappagams in collaboration with "CARE"—Proposal approved in principle—Orders issued.**

இம் மாநிலத்தில் தற்போது 1,000 குழந்தைகள் காப்பகங்கள் அல்லது முன்னிலைப் பள்ளிகள் உள்ளன. அவை 2-முதல் 5-வயது வரையிலான, பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளின் நலனை கவனிக்க, மகளிர் நலத் துறையின் ஆதரவில் செயல்படுகின்றன.

2. பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளுக்கு உணவளிக்கவும், குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டவும், மாநில அரசுடன் ஒத்துழைத்து, திட்டமொன்றை தொகுக்க, "கேர்" (CARE) நிறுவனம் முன் வந்துள்ளது. இத் திட்டம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. (அ) இப்போதுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களிலும் உணவளிக்கும் திட்டம் (ஆ) இப்போதுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களுக்கு, கட்டிடங்கள் இல்லாத இடங்களில், கட்டிடங்களைக் கட்டுதல்.

**உணவளிக்கும் திட்டம்.**—குழந்தைகள் காப்பகத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இணையாக, காப்பகத்திலில்லாத மற்றொரு குழந்தைக்கும், கருவுற்ற மகளிர் ஒருவருக்கும் உணவளிக்க "கேர்" நிறுவனம் பொறுப்பேற்கிறது: ஒவ்வொருவருக்கும் நாளொன்றிற்கு 90 கிராம் வீதம் மாதம் ஒன்றிற்கு 22 நாட்களுக்குரிய உணவுப் பொருட்கள் "கேர்" நிறுவனம் வழங்கும். அவற்றிற்குரிய போக்குவரத்து, எரிபொருள், சமையல்காரர்களின் ஊதியம், ஊறுகாய், மற்றும் இதர செலவினங்களை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்ற, "கேர்" நிறுவனத்திற்கு ஏற்படும் நிர்வாகச் செலவையும் கூட, அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். இத் திட்டத்தை செயல்படுத்த, அரசிற்கு ஏறக்குறைய சுமார் 21 முதல் 22 லட்ச ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உணவளிக்கும் திட்டத்திற்கு அந்நிறுவனத்தின் உதவியானது, குறைந்தது 5 ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்று, "கேர்" நிறுவனம் உறுதியளித்துள்ளது. உள்ளூரில் ஏற்படும் செலவுகளை பொறுத்த வரையில் குறைந்தது 50 சத வீதமாவது பொது மக்களிடமிருந்து உள்ளூர் நன்கொடையாக வசூலிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிடங்கள் கட்டுதல்.**—நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறையுடன் கலந்தாலோசித்து, ரூ. 4,750 மதிப்பளவில் ஒரு கட்டிடம் கட்ட மாதிரித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டப்பட வேண்டிய ஒவ்வொரு குழந்தைகள் காப்பக கட்டிடத்திற்கும் ரூ. 3,500-ஐ காப்புத் தொகையாக தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் செலுத்த "கேர்" நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. எஞ்சிய ரூ. 1,250—ஆனது உள்ளூர் நன்கொடை மூலம் பெறப்படும். செலவில் எந்த ஒரு பகுதியையும் மாநில அரசோ, ஊராட்சிகளோ, ஊராட்சி ஒன்றியங்களோ ஏற்றுக் கொள்ளாது. கிராம வளர்ச்சி இயக்குநருடனும், மகளிர் நல இயக்குநருடனும் கலந்தாலோசித்து, குழந்தைகள் காப்பகம் கட்டப்பட வேண்டிய இடங்கள் பற்றி பிறகு முடிவு செய்யப்படும்.

3. இக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து, இத் திட்டங்களுக்கு கொள்கையளவில் அனுமதியளிக்கிறது. இதற்கு ஏற்படும் மொத்த செலவுகள் போன்ற மேலும் இதர பொறுப்புகளை சென்னையிலுள்ள "கேர்" நிறுவனத்தினுடன் கலந்தாலோசித்து அனுமதியளிக்கும் வகையில் மேலும் ஆணைகள் நாளடைவில் பிறப்பிக்கப்படும். இத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த, ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களின் நெருங்கிய ஒருங்கிணைப்பு அவசியம் தேவையிருப்பதால், இத்திட்டத்திற்கு கிராம வளர்ச்சி இயக்குநரே பொறுப்புள்ளவராக இருக்கவேண்டும் என்றும் அரசு தீர்மானித்துள்ளது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 17-5-1968 நாளிட்ட அரசு ஆணை எண் 963-ன் சுருக்கம்.)

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றியவாரியான மக்கள் தொகை கணக்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **கோயம்புத்தூர் (மேற்கு)** | |
| 1 | பல்லடம் | 54.410 |
| 2 | சுல்தான்பேட்டை | 50,336 |
| 3 | திருப்போரூர் | 67,991 |
| 4 | பொங்கலூர் | 45,860 |
| 5 | அவனாசி | 95,080 |
| 6 | சூலூர் | 92,676 |
| 7 | பெரியநாயக்கன் பாளையம் | 64,271 |
| 8 | கிணத்துக்கடவு | 74,620 |
| 9 | உடுமலைப் பேட்டை | 92,994 |
| 10 | தொண்டமுத்தூர் | 62,582 |
| 11 | அன்னூர் | 74,540 |
| 12 | பொள்ளாச்சி (வடக்கு) | 72,615 |
| 13 | பொள்ளாச்சி (தெற்கு) | 54,957 |
| 14 | சர்க்கார் சாமக் குளம் | 57,300 |
| 15 | காரமடை | 89,578 |
| 16 | குடிமங்களம் | 43,268 |
| 17 | போரூர் | 100,989 |
| 18 | மதுக்கரை | 69,084 |
| 19 | ஆனைமலை | 93,743 |
| 20 | மடத்துக் குளம் | 56,142 |
| 21 | வால்பாறை | 80,029 |
| | | 1,493,139 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **தர்மபுரி** | |
| 1 | கிருஷ்ணகிரி | 47,021 |
| 2 | வேப்பனப்பள்ளி | 44,444 |
| 3 | காவேரிப்பட்டனம் | 109,165 |
| 4 | பருகூர் | 88033 |
| 5 | ஊத்தங்கரை | 104,118 |
| 6 | பெண்ணாகரம் | 92,378 |
| 7 | ஓசூர் | 66,169 |
| 8 | தர்மபுரி | 59,317 |
| 9 | மொரப்பூர் | 81,127 |
| 10 | பாபிரெட்டிப்பட்டி | 57,314 |
| 11 | சூளகிரி | 73,127 |
| 12 | நல்லம்பள்ளி | 80,371 |
| 13 | பாலக்கோடு | 114,484 |
| 14 | தளி | 100,905 |
| 15 | ஹரூர் | 77,162 |
| 16 | கெலமங்களம் | 85,153 |
| | | 1,280,288 |

—தொடரும்.

## இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| காஞ்சித் தலைநகர் விழா .. .. | 1 |
| மொரிஷியஸ் தீவினிலே.. .. .. | 3 |
| எத்தனை கோடி வெற்றி .. .. | 7 |
| விலங்கின வளர்ப்பு— | |
| நகராட்சிகளின் பொறுப்புகள் .. .. | 11 |
| கருத்தைக் கவர்ந்த கழுகு மலை .. .. | 20 |


## அடுத்த இதழில்...

தமிழகத்தின் சிறந்த ஊர்ப்பணியாளர்—அட்டைப்படத்துடன் சிறப்புக் கட்டுரை.

தமிழகத்தின் சிறந்த கிராமமென இரண்டாவது பரிசு பெற்ற அனந்தலை.

"கவியரங்கம்" விழாவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் பாராட்டுக் கவிதை.

காந்தியடிகள் நாட்காட்டி—மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோள்.


ஆசிரியக் குழுத் தலைவர் :

திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ. ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் : திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,.

Wrapper printed at Vadapalani Press, Madras-26.

## கழுகுமலை (நெல்லை மாவட்டம்) தமிழகத்தின் சிறந்த கிராமம்



பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்



Stanes

ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்
"கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HB1-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்)—மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை·ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

தந்தி : "கோல்டுஸீட்"

போன் : 30442

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |